பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | புரட்டாதி 13 திங்கட்கிழமை 30.09.2019 | கதிர் 329

**இனி து ரகசியம் அல்ல!**

'கல்லுளி மங்கன் போன வழி, காடு மேடெல்லாம் தவிடு பொடி' – என்பார்கள்.

உளி பிடித்துச் செதுக்கத் தெரியாத முட்டாளின் கையில் உளி கிடைத்தால் அவன் போகின்ற, வருகின்ற வழிகளில் கிடைக்கும் கற்களை எல்லாம் பக்கம் 02

# எங்களுக்காகச் சின்னத்தையாவது மாற்ற முடியாதவர்களுடன் என்ன கூட்டணி வேண்டிக் கிடக்கின்றது என மைத்திரி கேள்வி



கொழும்பு, செப்.30

எமக்கு கோட்டாபயவுக்கு வாக்களிக்க முடியும், ஆனால் எமக்காகச் சின்னத்தைக் கூட மாற்ற முடியாதவர்களுக்காக நாம் எப்படி வாக்களிக்க முடியும் எனக் கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

குருநாகலில் நேற்று நடைபெற்ற கட்சியின் ஆதரவாளர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கேள்வி எழுப்பினார். பக்கம் 03

# ஆலய வளாகத்தில் பிக்குவின் உடலை எரித்தோர் மீது நடவடிக்கை அவசியம்!

## ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றார் இரா.சம்பந்தன்



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 30

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்தவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார். பக்கம் 03

## சகல வேட்பாளர்களுடனும் பேசிய பின்னரே தீர்மானம்!

### கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.



முல்லைத்தீவு, செப். 30

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வித தீர்மானங்களையும் இதுவரை எடுக்கவில்லை என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பக்கம் 02

## மொட்டுடன் சேராது கை!



கொழும்பு, செப். 30

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைவ பக்கம் 03

## தேசிய மக்கள் இயக்கத்தின் வேட்பாளராகினார் மகேஷ்!



கொழும்பு, செப். 30

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் இயக்கத்தின் (என்.பி.எம்.) பக்கம் 03

## ரணில் - சஜித் பனிப்போர்!

கொழும்பு, செப். 30

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவைத் தாண்டி கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸா அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கட்சியின் பிரசார விடயங்கள் தொடர்பான ஏற்பாடுகளில் இரு பக்கம் 02

## கோட்டாவை சு.க. ஆதரித்தால் குமார வெல்கம வேறு முடிவாம்!

கொழும்பு, செப். 30

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்தால், தான் வேறொரு முடிவை எடுப்பார் என அதிரடியாக அறிவித்துள்ளார் நாடாளு பக்கம் 03

## வடக்கு சட்டத்தரணிகளின் சேவைப் புறக்கணிப்பு முடிவு

### சட்ட மா அதிபரின் உறுதிமொழியை அடுத்து

யாழ்ப்பாணம், செப்.30

முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டளையை அவமதித்து நீராவியடி பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணி அருகே பௌத்த பிக்குவின் உடலைத் தகனம் செய்தவர்கள் மற்றும் அதற்குத் துணை பக்கம் 02

## கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காவிடின் அரசுக்கான ஆதரவை விலக்கிவிடுங்கள்!

### கூட்டமைப்பிடம் தமிழர் மரபுரிமைப் பேரவை கோரிக்கை



முல்லைத்தீவு, செப். 30

வடக்கு மாகாணத்தில் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் சிங்கள மயமாக்கலை உடன்நிறுத்தல் உள்ளிட்ட 5 அம்சக் கோரிக்கைகள் அரசிடம் முன்வைக்கப்படவேண்டும். அவற்றுக்குச் செவிசாய்க்க பக்கம் 03

## ரணிலுடன் கூட்டமைப்பு இன்று சந்தித்துப் பேச்சு




கொழும்பு, செப்.30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளதாக கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பக்கம் 03

## சுதந்திரபுரம் பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு



முல்லைத்தீவு, செப். 30

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. பக்கம் 03

# ஏழு பெண் யானைகள் மர்மமான முறையில் உயிரிழந்தமை குறித்து விசேட விசாரணை



ஹபரணை – ஹிரிவட்டுன, தும்பிக்குளம் காட்டில் ஏழு பெண் யானைகள் மர்மமான முறையில் உயிரிழந்தமை குறித்து, விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் கீழ் சீகிரிய வனஜீவராசிகள் அலுவலகம் ஊடாக இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யானைகளின் மரணத்தின் பின்னணியில் பாரிய குற்றம் இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில் அது தொடர்பில் விசாரணைகள் சி.ஐ.டி.எனப்படும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. இது குறித்து பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு சூழல் மற்றும் இயற்கைதொடர்பிலான கற்கை நிலையத்தின் தலைவர் ரவீந்ர காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும்நேற்றுமாலை வரைவிசாரணைகள்சி.ஐ.டியிடம் ஒப்படைக்கப்படவில்லை என்பதை சி.ஐ.டிக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகரவும் உறுதி செய்தனர்.

எனினும் இந்த சம்பவம் குறித்து ஹபரண பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு மர்மமாக உயிரிழந்த மேலும் யானைகளின் உடலங்கள் தும்பிக்குளம் காட்டில் உள்ளனவா என்பதை உறுதி செய்யவும், உயிரிழப்புக்கான காரணத்தைக்கண்டறிய ஏதேனும் சான்றுகள் கிடைக்கின்றனவா என ஆராயவும் 10 குழுக்கள் தும்பிக்குளம் காடு முழுவதும் விசேட தேடுதல்களை ஆரம்பித்துள்ளன.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், இராணுவத்தினர் பொலிஸார் இணைந்து இந்த 10 குழுக்களாக சேர்ந்து இந்த சோதனைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி (வெள்ளியன்று) நான்கு பெண் யானைகளின் உடலங்கள் முதலில் மீட்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் நேற்று முன்தினம் அதிகாலை ஒரு யானையின் உடலம் மீட்கப்பட்டது. அந்த யானையின் அருகே அதன் 4 வயதான குட்டி உயிருடன் நின்றது. அதன் பின்னர் மேலும் இரு யானைகளின் சடலங்கள் அப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள 7 யானைகளும் பெண் யானைகள் என்பதுடன், அவற்றில் 3 யானைகள் கர்ப்பமாக இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நாட்டுக்குள் நுழைய முயன்ற 2 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் நுழைய முயற்சித்தவர்கள் என்று கூறப்படும் இருவர் மன்னார், உருமலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தக் கடற்பரப்பில் படகொன்றை கடற்படையினர் சோதனைக்கு உட்படுத்தியபோது, அது இந்தியாவில் பதிவுசெய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

படகில் இருந்த சந்தேக நபர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது, அவர்கள் இருவரும் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் நுழைய முயற்சித்துள்ளமை தெரிய வந்துள்ளது. இருவரும் இலங்கையில் இருந்து 2008ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்குத் தப்பிச்சென்றவர்கள் என்பதும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட இலங்கை பிரஜைகளான சந்தேக நபர்கள் இருவரும், மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நின்றபொலிஸார்மீதுநடவடிக்கை எடுக்கக் கோரி வடக்கு மாகாண சட்டத்தரணிகள் முன்னெடுத்த தொடர் சேவைப் புறக்கணிப்பு முடிவுக்கு வந்தது.

சட்ட மா அதிபர் தப்புல்ல டி லிவேரா தொலைபேசி ஊடாக வழங்கிய உறுதிமொழியை அடுத்து சட்டத்தரணிகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் சேவையில் ஈடுபடுவர் என்று முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் சட்டத்தரணி எஸ்.கெங்காதரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு பழையசெம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் பௌத்த தேரரின் உடலை தகனம் செய்வது தொடர்பாக நீதிமன்றின் கட்டளையை அவமதித்தமை மற்றும் சட்டதரணி உள்ளிட்டோர் தாக்கப்பட்டமைக் கண்டித்தும் உரிய நடவடிக்கையை எடுக்கக் கோரியும் வடக்கு மாகாண சட்டதரணிகள் கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 4 நாள்கள் தொடர் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் சேவைப் புறக்கணிப்புப்போராட்டம்நிறைவு செய்யப்பட்டு இன்று திங்கட்கிழமைதொடக்கம் நீதிமன்ற நடவடிக்கைகளில் சட்டத்தரணிகள் முன்னிலையாவார் என்று முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் குறிப்பிட்டார்.

“சட்டமா அதிபர் தப்புல்ல டி லிவேரா, மூத்த சட்டதரணியும் வன்னி வலய சட்டதரணிகள் சங்க உபதலைவருமான அன்ரன் புனிதநாயகத்தைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்த விவகாரம் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடத்தப்படும் உறுதிமொழி என வழங்கினார்.

“அத்துடன் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல்குமார்ரட்ணம்என்னைத் தொடர்புகொண்டு உறுதிமொழி வழங்கினார்.

“இதுவரை நாள்களாக வடக்கு சட்டதரணிகள் மேற்கொண்ட போராட்டதுக்கு ஆதரவளித்த கிழக்குமாகாணம்மற்றும்ஏனைய மாவட்ட சட்டதரணிகளுக்கு நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

“ஏனையவழிகளில்ஆதரவை வழங்கிய சிவில் அமைப்புகளுக்கும் பொதுமக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்” – என்றும் சட்டதரணி எஸ். கெங்காதரன் தெரிவித்தார்.

இதேவேளை, சட்டதரணிகள் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பிலும் நீதிமன்ற உத்தரவு அவமதிப்பு தொடர்பிலும் முல்லைத்தீவு பொலிஸாரால் B1218/19, B1219/19 என்ற முதல் அறிக்கை முல்லைத்தீவுக்கு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளருமானஎம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அனைத்து வேட்பாளர்களுடனும்பேசிய பிற்பாடே அதுதொடர்பில் ஒரு தீர்மானத்தை எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு–குமுழமுனைப் பகுதியில் நேற்று ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கருத்தாய்வுக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சுமந்திரனிடம், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் பங்கொடுக்கும் நிழ்வுகளில், அமைச்சர்கள் வருகின்ற போதுஅவர்களுக்குநன்றிசெலுத்திப் பேசுவது வழக்கம்.வேறொரு நிகழ்வுக்கு ஒரு அமைச்சர் வந்தால், அவர்களையும் நன்றி செலுத்திப் பேசுவது வழக்கம்.

அந்த விதத்தில், சில பொதுவான நல்ல கருத்துக்கள் சில வேளைகளில் சொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாகக் கட்சி எந்த முடிவையும் இதுவரை எடுக்கவில்லை. யாரை ஆதரிப்பதென்றோ, எவரையாவது ஆதரிக்கவேண்டும் என்றுகூட நாங்கள் இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை.

நாங்கள் எல்லா வேட்பாளர்களுடனும்,அவர்கள்விரும்பினால் பேச்சு நடத்துவதெனத் தீர்மானித்திருக்கின்றோம். அப்படி சில சில பேச்சுகள் நடைபெறுகின்றன.

ஆகையினாலே அவ்வாறான பேச்சுக்கள் முடிவடைந்த பின்பு, அவர்களும்பகிரங்கமான நிலைப்பாடுகளை அவதானித்து ஒரு தீர்மானத்தை எடுப்போம். இதுவரை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் எந்தத் தீர்மானங்களும் எட்டப்படவில்லை – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடித்து, உடைத்து, சிதறடித்துச் செல்வான் என்பதுதான் இதன் பொருள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி என்ற உளியும், அதன் மூலம் சு.கவின் தலைமை என்ற மற்றொரு ஆயுதமும் இப்படித்தான் பிழையான கைகளில் கிடைத்து விட்டனவோ என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

போகின்ற வழிகளில் காடு, மேடு, மலைகளை எல்லாம் தவிடு பொடியாக்குகின்ற மாதிரித்தான் இப்போது சு.கவை தவிடு பொடியாக்கியிருக்கின்றார் அதன் தலைவர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன.

இன்னும் 47 நாள்கள்தான் அவர் ஜனாதிபதி. அதற்கிடையில் மிச்சசொச்சம் இருக்கும் சுதந்திரக் கட்சியையும் உண்டு, இல்லை என்று பண்ணிவிட்டுத்தான் போவது என்பதில் அவர் முழுத் தீவிரமாக இக்கின்றார் என்றே எனது மனதுக்குப்படுகின்றது.

அண்மைக்கால சு.க. பற்றிக் விமர்சிப்பதற்கு நான் இரண்டு பழமொழிகளை அடிக்கடி இப்பத்தியில் குறிப்பிடுவதுண்டு.

*‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை’* அல்லது *‘உலக்கை தேய்ந்து உளிப் பிடியான கதை’* என்று நான் குறிப்பிடுவதுண்டு.

இந்தப் பழமொழிக் கூற்றுக்களை மெய்ப்பிக்காமல் சு.க. தலைமைப் பதவியிலிருந்து தாம் இறங்குவதில்லை என்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக உறுதியாக – பிடிவாதமாக – இருக்கின்றார் போலும்.

கடந்த பொதுத் தேர்தலில் 96 எம்.பிக்களை நாடாளுமன்றுக்கு அனுப்பிய சு.க. கூட்டமைப்பில் இன்று எஞ்சியிருகின்றவர்கள் இருபது பேர்தான். மிச்சம் 75 இற்கும் அதிகமானோர் சு.க. கூட்டணிமூலம்எம்.பி. பதவியைத்தக்க வைத்துக் கொண்டு, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன பக்கம் சென்றுவிட்டனர்.

அப்படிக் கட்சி மாறியவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு லாயக்கற்ற – முகுகெலும்பில்லாத – கட்சித் தலைவராக இருக்கின்றார் மைத்திரியார்.

அதுவல்லவிடயம். எஞ்சியிருக்கும் இருபது எம்.பிக்களும் சு.கவை விட்டு விரைவில் வெளியேறும் சாத்தியம் அதிகம் தென்படுகின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிரதான கட்சிகளின் வேட்பாளர் அறிவிக்கப்பட்டு விட்டனர். ஆனால் மைத்திரி தரப்போ அவரின் சு.கவோ இந்தப் பக்கமும் இல்லாமல், அந்தப் பக்கமும் இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கின்றது.

தனது கட்சி எம்.பிக்களை எல்லாம் கட்டுப்படுத்தி, தனக்குக் கீழ் ஓரணியாக வைத்திருக்கும் திறமை மைத்திரியாருக்குக் கிஞ்சித்தும் கிடையாது.

கட்சியில் எஞ்சியிருக்கும் எம்.பிக்களில் துமிந்த திஸநாயக்கா உட்பட கணிசமானோர் மஹிந்தவின் மொட்டுக் கட்சியுடன் சேர்ந்து செயற்பட உடன்படார். அவர்கள் ஐ.தே.க. பக்கம் அணி சேரலாம்.

நிமால் சிறிபால டி சில்வா போன்ற இரத்தத்தில் ஊறிய சு.கவினர் எக்காரணம் கொண்டு ஐ.தே.க. பக்கம் செல்லார். அவர்கள் பொதுஜன பெரமுன பக்கம் செல்லவே தயாராகின்றனர்.

அதாவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சு.கவில் எஞ்சியிருக்கும் இருபது எம்.பிக்களில் கணிசமானோர் இரண்டு புதிய பிரிவுகளில் பயணிக்கத் தொடங்கும் சாத்தியமே அதிகம் நிலவுகின்றது.

அப்படி ஏற்பட்டால் 96 எம்.பிக்களுடன் இருந்த சு.க. கூட்டமைப்பில் மைத்திரியார் தலைமையில் செயற்பட எஞ்சியிருக்கப் போகின்றவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலராகத்தான் இருக்க முடியும்.

ஆக, கல்லுளி மங்கன் தலைமைத்துவத்தில் கட்சியே தவிடு பொடி என்ற நிலைமைதான் கடைசியில்.

இதற்கிடையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மொட்டு அல்லாத பொதுச் சின்னத்திற்கு இணங்காவிட்டால் அக்கட்சியை ஆதரிக்க மாட்டோம் என்று மைத்தியார் நேற்று மாலை குருநகலில் முழங்கியிருந்தார்.

அது குறித்து தென்னிலங்கையின் முக்கிய அரசியல் விமர்சகர் ஒருவரிடம் கேட்டேன். அவரின் பதிலை இரத்தினச் சுருக்கமாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

*“எங்களுக்குத் தெரியாத மைத்திரியா? முதல் நாள் மஹிந்தவுடன் கூடியிருந்து அப்பம் சாப்பிட்டு, அவருக்கான ஆதரவை உறுதிப்படுத்திவிட்டுத்தானே அடுத்த நாள் குத்துக் கரணம் அடித்து மஹிந்தவுக்கு எதிராகக் களத்தில் இறங்கியவர் இவர்?*

*“எட்டு அடி நிலத்துக்குள் எனது கதையை முடித்து விடுவார்கள் என்று தாம் விமரிசித்த தரப்பைத்தான் இடையில், குறுக்கு வழியில் பிரதமராக்கி, அவர்களுடன் குசலம் விசாரித்தார்.*

*“நான் பதவியில் இருக்கும் வரை ரணிலைப் பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து வைக்க மாட்டேன் என்று சூளுரைத்தவர் தான் பின்னர் ரணிலைப் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்து வைத்தார்.*

*“ஆகவே, அவரின் கதையை ‘சீரியஸ்’ ஆக எடுக்காதீர்கள். அவர் நேற்று சொன்னதற்கு மாறாக இன்று சொல்வார் அல்லது செய்வார். அதுவும் பதவிக் காலத்தின் அந்தத்தில், அதற்குப் பின்னர் தனது எதிர்காலம் பற்றிய பதற்றத்தில் இருக்கும் அவர் இப்படித்தான் நேரத்துக்கு ஒன்று பேசுவார். அதை செவிமடுக்கின்றமையைத் தவிர, நாட்டுக்கு வேறு வழியில்லை.”* – என்றார் அந்த விமர்சகர்.

அவரின் கருத்து வாசகர்களுக்குச் சமர்ப்பணம்.

**- மின்னல் -**

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருக்கும் இடையில் வெளியே தெரியாத பனிப்போர் ஒன்று பெரும் இழுபறியாகத் தொடர்வதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சியை விட்டு வெளியேற்றியோரை மீண்டும் கட்சியின் சேர்த்தல், புதிய கூட்டமைப்புக்களை உருவாக்கும் கொள்கைநிலைப்பாடு போன்றவற்றில் இருவருக்கும் இடையில் நிலவும் கருத்து முரண்பாடு, அடுத்து வரும் நாள்களில் மோசமான வெளிப்பாடுகளை ஏற்படுத்தக் கூடும் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது.

நேற்று அலரி மாளிகையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலை அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் குறித்து கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தமையோடு, அது குறித்தும் அதிகம் உரையாடியமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## எங்களுக்காகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கிராமிய மட்டக் கட்சி உறுப்பினர்கள் ஆகியோரின் வேண்டுகோள் கூட்டணி அமைப்பதாயின் கட்சியின் சின்னத்தை மாற்ற வேண்டும் என்பதாகும்.

இதனை நான் நேற்று (சனியன்று) எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, பொதுஜன பெரமுன தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது எடுத்துக் கூறினேன்.

அவர்களுக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நிறையவே செய்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தினால்தான் இன்று அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவ்வளவும் செய்த சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைக்க சின்னத்தை மாத்திரம் விட்டுக் கொடுக்க முடியாது எனின், இத் தகையவர்களுடன் கூட்டுச் சேர்வது எங்ஙனம் எனவும் ஜனாதிபதி மேலும் கேள்வி எழுப்பினார்.

## ரணிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கவின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரிகிறது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அதன் பேச்சாளர் சுமந்திரன் ஆகியோர் பங்கேற்பர் எனத் தெரிகின்றது.

எனினும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா இன்று யாழ்ப்பாணத்தில் நிற்கின்றமையால் பெரும்பாலும் இன்றைய கொழும்பு சந்திப்பில் பங்குபற்றார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. ரெலோத் தலைவர் செல்வமும், புளொட் தலைவர் சித்தார்த்தனும் இன்றைய சந்திப்பில் கலந்து கொள்வரா என்பதும் இதுவரையில் தெரியவில்லை.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் இறுதித் தீர்மானத்தை எடுத்திருக்காத நிலையில் இச்சந்திப்பு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளராக ஜெனரல் மகேஸ் சேனநாயக்க அறிவிக்கப்பட்டுள்ளார். பல்வேறு சிவில் சமூக அமைப்புகள் அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் இயக்கத்தின் மாநாடு நேற்றுப் பிற்பகல் கொழும்பு சுகததாஸ உள்ளரங்கில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டிலேயே, தேசிய மக்கள் இயக்கத்தின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டார். (ஐ)

## மொட்டுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத்துக்காக இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பின்னடைய செய்வதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஆலய வளாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைகாலங்களில் குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டம் நிலைநாட்டப்படாத விதிவிலக்குக் கலாசாரம் வலுப்பெற்று வருகின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

முல்லைத்தீவு, செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தைத் தங்களது கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்

இந்தச் சம்பவத்தின் உண்மை நிலைவரம் பின்வருமாறு –

1. முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவிலானது பல நூற்றாண்டு வரலாறு கொண்ட ஒரு புராதன கோவிலாகும்.

2. இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் முற்றிலும் தமிழ் மக்கள். பெரும்பான்மையானவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள்.

3. யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஒரு பௌத்த துறவி இந்த நிலத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியைக் கைப்பற்ற முயற்சித்து அங்கே நிலைகொள்ள எத்தனித்தார்.

4. அந்த நிலத்தை ஆக்கிரமிக்கும் பௌத்த துறவியின் முயற்சிக்கு தமிழ் இந்து மக்கள் தொடந்து தமது எதிர்ப்பை வெளிக்காட்டியதோடு இது தொடர்பில் ஒரு முறுகல் நிலை தொடர்ந்தும் காணப்பட்டு வந்தது

5. அந்தப் பௌத்ததுறவி அண்மையில் கொழும்பில் காலமானார். அவரது பூதவுடலை நீராவியடிப் பிள்ளையார் கோவில் வளாகத்தில் தகனம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது வேண்டுமென்றே உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காகச் செய்யப்பட்ட ஒரு செயலாகும்.

6. இந்த விடயம் முல்லைத்தீவு நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது, செப்ரெம்பர் 22.2019 அன்று அந்தத் துறவியின் பூதவுடலை நீராவியடிப் பிள்ளையார் தேவஸ்தான பூமியில் தகனம் செய்வதற்கான தடை உத்தரவை முல்லைத்தீவு நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

7. மேலதிக விசாரணைகளின் பின்னர் 23 செப்ரெம்பர் 2019 அன்று அந்தத் துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதைத் தடை செய்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. நீதிமன்ற உத்தரவின்படி, அந்த இறுதிக் கிரிகைகள் அண்மையில் உள்ள பிறிதொரு காணியில் இடம்பெறவேண்டியதாயிருந்தது.

8. நீதிமன்றக் கட்டளையை மீறி சடலம் ஆலயத்தின் தீர்த்தக் கேணியை அண்டிய பகுதியில் தகனம் செய்யப்பட்டது. தீர்த்தக் கேணியில்தான் தெய்வத்தின் பல்வேறு தேவைக்காகப் புனித நீர் சேர்த்து வைக்கப்படுகின்றது. இச்செயலினால் ஆலயமும் அதன் பூமியும் தனது புனிதத் தன்மையை இழந்துள்ளன. சைவமக்கள் தங்களுடைய நெருக்கமான உறவினர் இறந்தபிறகு குறைந்தது ஒரு மாத காலம் வரையில் ஆலயத்தினுள்ளோ அதன் பூமிக்கோ செல்வதில்லை

9. நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதற்காக அவ்விடத்தில் பிரசன்னமாகி இருந்த பொலிஸார் நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு மாறாக அந்தத் துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்கு துணையாக இருந்தனர்.

10. இதன்பிரகாரம், பின்வரும் கோரிக்கைகளை விடுக்க விரும்புகிறேன்

(i) நீதிமன்ற தீர்ப்பினை மீறிய நபர்கள் முறையாக கையாளப்படுவதுடன் அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(ii) நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதற்கு மாறாக அந்தத் துறவியின் பூதவுடலை ஆலய வளாகத்தில் தகனம் செய்வதற்குத் துணையாக இருந்து நீதிமன்றத் தீர்ப்பை நிறைவேற்றத் தவறிய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளானது சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அமைப்புகளின் இயலாமையை எடுத்துக்காட்டுவதுடன் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத நீதிமன்ற அவமதிப்பு குற்றம்வரை சென்றுள்ளது.

இந்த விடயங்கள் விசாரணை செய்யப்பட வேண்டும்.

மேலும் அண்மைக் காலங்களில் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டம் நிலைநாட்டப்படாத விதிவிலக்குக் கலாசாரம் வலுப்பெற்று வருகின்றமையை நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

மனிதாபிமான மற்றும் மனித உரிமைகளுக்கெதிராக இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்கு எதிராக முறையான விசாரணைகளோ முறையான நடவடிக்கைகளோ எடுக்கப்படவில்லை. நீதிமன்றத்தை அவமதித்த நபருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தை மீறிச் செயற்பட்ட நபரொருவருக்கு எவ்வித முறையான விசாரணைகளும் நடத்தாமல் அத்தகைய சட்டமீறல்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உயர்நிலைப் பதவி வழங்கப்பட்டுள்ளது. நான் மேலதிக விவரங்களை தற்போது குறிப்பிட விரும்பவில்லை. நான் குறிப்பிடும் விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி விளங்கிக் கொள்வார் என அறிவேன்.

நீராவியடிப் பிள்ளையார் ஆலயச் சம்பவம் தொடர்பில் முறையான சுயாதீனமான விசாரணைகள் இடம்பெறாத பட்சத்தில், தொடர்ந்தும் இத்தகைய விதிவிலக்கு கலாசார நிலைமை தொடர்வதை ஊக்கப்படுத்துவதாக அமையும். அதேவேளை நாட்டுக்கும் எல்லா மக்களுக்கும் மிக பாரதூரமான விளைவுகளை உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தும்.

எனவே சட்ட ஒழுங்கை நிலைநாட்டவேண்டிய பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் முறையான விசாரணைகள் இடம்பெற்று நீதிமன்ற தீர்ப்பை மீறிய நபர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்த விரும்புகிறேன் – என்றுள்ளது. (ஐ)

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் குமார வெல்கம.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை அறிவிக்கவுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தீவிர அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த முன்னாள் அமைச்சர் ஜெயதிஸ்ஸ ரணவீர நேற்று முன்தினம் கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்தார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் கைத்தறி, நீர்ப்பாசன அமைச்சராகவும், மகாவலி அபிவிருத்தி பிரதி அமைச்சராகவும் அவர் பணியாற்றினார்.

இரத்தினபுரியிலுள்ள அவரது இல்லத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை அறிவித்தார்.

2015 தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பின்னர், தீவிர அரசியலில் இருந்து அவர் ஒதுங்கியிருந்தார். (ஐ)

## கோரிக்கைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தவறும் பட்சத்தில் அரசுக்கான ஆதரவு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

– இவ்வாறு தமிழர் மரபுரிமைப் பேரவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளது.

முல்லைத்தீவுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட குழுவினர் தமிழர் மரபுரிமைப் பேரவையின் பிரதிநிதிகளையும், நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

முல்லைத்தீவு – கோவிற்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில், நீராவியடிப் பிள்ளையார் ஆலயத் தீர்த்தக் கேணிக்கு அருகில் பௌத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்ட விவகாரம் மற்றும் தமிழ் மக்களின் சமகால நிலைமைகள் தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

இந்தக் கலந்துரையடலின் இறுதியில் தமிழ் மக்களின் சமகால நிலைவரம் தொடர்பாக ஐந்து அவசர கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழர் மரபுரிமைப் பேரவையால் கையளிக்கப்பட்டது.

அவ்வாறு விடுக்கப்பட்ட ஐந்து கோரிக்கைகளையும், அரசு ஏற்கத்தவறும் பட்சத்தில் கூட்டமைப்பு அரசுக்கு வழங்கும் ஆதரவை மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனவும் தமிழர் மரபுரிமைப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

நேற்றைய சந்திப்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து சட்டரீதியான உதவியைக் கோருவதாக அமையவில்லை. மாறாக அரச அனுசரணையுடன் மத்திய அரச நிர்வாகக் கட்டமைப்புக்களால் வடக்கு – கிழக்குப் பகுதிகள் மீது மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட அடிப்படை உரிமைமீறல்கள் தொடர்பில் அவசர மற்றும் நியாயபூர்வமான கோரிக்கைகளை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம் என்று தமிழர் மரபுரிமைப் பேரவையினர் குறிப்பிட்டனர்.

மனுவில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:

நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் தமிழ் மக்களின் பூர்வீக ஆலயமாகும். இவ்வாலயத்தைத் திட்டமிட்டு ஆக்கிரமித்து விகாரை அமைப்பதை உடன் நிறுத்த காத்திரமான அரசியல் அழுத்தங்களை வழங்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் தொல்லியல் பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளிப்படுத்தப்பட்ட இடங்களை நம்பகத்தன்மையான தமிழ் தொல்லியல் ஆய்வாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், யாழ். பல்கலைக்கழகம், அந்தப் பிரதேசங்களின் உள்ளூர் நிர்வாக மற்றும் கிராம மட்ட மக்களின் பங்குபற்றுதலுடனான கூட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில், ஆய்வு செய்யப்பட்டு இறுதி செய்யப்படும் வரை வர்த்தமானி குறிப்பிடப்பட்ட இடங்களில் தற்போதுள்ள இடங்களைவிட மாற்றங்கள், திரிபுபடுத்தல்கள், புதிய கட்டுமானங்கள், மேற்கொள்ளப்படாது பேணப்படல்வேண்டும் என்பதை வலியுறுத்தி வர்த்தமானி ஒன்றை உடன் வெளியிடக் கலாசார அமைச்சிடமிருந்து எழுத்து மூலம் வாக்குறுதி பெறவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் மகாவலி எல் அபிவிருத்தி வலயம் மூலம் ஏற்படுத்தப்பட்ட, திட்டமிட்ட சிங்களமயமாக்கல்கள், தற்போது தொடர்ந்து இடம்பெறுவதால் குறைந்த பட்சம் 2007ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மீறப்படுவதுடன் 1988ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல், எல்லைக் கிராமத் தமிழ் மக்களின் பங்குபற்றுதலுடன் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்படல் வேண்டும். எதிர்வரும் நாள்களில் மகாவலி அதிகார சபையினூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட்டு மாகாணத் திணைக்களங்களினூடாக மேற்கொள்ளப்படவேண்டும்.

ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 2009இன் பின்னர் வர்த்தமானியில் வெளியீடு செய்யப்பட்ட, ஒதுக்கக் காடுகள் தொடர்பான எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்படல் வேண்டும்.

வனஜீவராசிகள் திணைக்களத்தினால், 2009ஆம் ஆண்டின் பின் வர்த்தமானியில் வெளியீடு செய்யப்பட்ட தேசியப் பூங்கா, இயற்கை ஒதுக்க இடங்களை மக்களின் குடியிருப்பு மற்றும் வாழ்வாதாரம் என்பவற்றுடன் தொடர்புடையது. ஆகையால் இவற்றுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்படல் வேண்டும் என்பதுடன், மக்கள் குடியிருப்புகள், கலாசாரம், வாழ்வாதாரம் என்பவை பாதிக்கப்படாவண்ணம் வர்த்தமானி ஒன்று உடன் வெளியிடப்படல் வேண்டும்.

இவ்வாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காத பட்சத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு வழங்கும் ஆதரவை மீள்பரிசீலணை செய்ய வேண்டும் – என்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாந்தி சிறீஸ்கந்தராசா, மருத்துவர் சி.சிவமோகன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள் து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், கே.சயந்தன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், தமிழர் மரபுரிமைப் பேரவையின் இணைத் தலைவர்கள் விஜயகுமார் நவநீதன், வண லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார், மருத்துவர் சுதர்சன் ஆகியோரும் நீராவியடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## சுதந்திரபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன் தினம் சுதந்திரபுரம் பகுதியில் தனியார் ஒருவரின் நிலத்தை உழவு செய்யும்போது கடந்த காலப் போரின் போது புதைக்கப்பட்ட ஒரு தொகுதி வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டன.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு வீட்டின் உரிமையாளரால் தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்புப் பொலிஸார் எட்டு கிளைமோர் குண்டுகளையும் 60 டிக்னேட்டர்களையும் இனம் கண்டு அடையாளப்படுத்தியுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அதனை அகற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## காலநேரம் பார்த்துக் காரியமாற்றல்

அரசியல் என்பது இராஜதந்திரத்துடன் முன்னெடுக்கப்பட வேண்டியது. சாணக்கியம் அதற்கு முக்கியமானது.

'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் விடயங்களை முன்னெடுக்கும் விவகாரம் அல்ல அரசியல்.

உரிய நேரத்தில், உரிய செயலை ஆற்ற வேண்டும். சந்தர்ப்பம், சூழ்நிலை பார்த்து காய் நகர்த்த வேண்டும்.

சில வேலைகளை நேர காலத்துடன் செய்ய வேண்டும்; சில வேலைகளை வேண்டுமென்றே காலத்தை இழுத்தடித்துச் செய்ய வேண்டும். அதில்தான் இராஜதந்திரமும், சாணக்கியமும் தங்கியுள்ளன.

சில வேலைகளை எதிர்த்தரப்பு எதிர்பாராத வேளையில் செய்ய வேண்டும். சில சமயங்களில் எதிர்த்தரப்பு எதிர்பாராத வேலையையும் செய்ய வேண்டியிருக்கும்.

இத்தகைய தீர்மானங்களை சரியான நேரத்தில் – கனகச்சிதமாக – எடுப்பதில்தான் பெறுபேறுகள் தங்கியுள்ளன.

2010 ஜனாதிபதித் தேர்தலில் நேரத்துடனேயே பொது எதிரணி வேட்பாளருடன் தமிழர் தரப்பு உடன்பாடு கண்டு, இணங்கிச் செயற்பட்டது. ஆனால் தென்னிலங்கைப் பேரினவாதம் ஒன்று திரண்டு தமிழர்கள் ஆதரித்த பொது எதிரணி வேட்பாளரான சரத் பொன்சேகாவை முன்னெபோதும் இல்லாத பெருவாரி மேலதிக வாக்குகளால் தோற்கடித்தது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்று கூட்டமைப்புத் தீர்மானித்து அறிவித்தபோது தபால் மூல வாக்களிப்பு முடிந்து விட்டிருந்தது. காலம் பிந்தித் தமிழர் தரப்பு களத்தில் இறங்கியபோதும் தமிழர்களும் சேர்ந்து ஆதரித்த வேட்பாளர் பௌத்த – சிங்களப் பேரினவாதக் குறியீட்டையே மண் கவ்வ வைத்தார்.

ஆகையினால், அரசியலில் காலநேர நகர்வு என்பது மிக மிக முக்கியமாகும்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுத்து, ஒரே மாதிரியாக – ஓரணியாக – செயற்பட வேண்டும் எனப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

நாமும் கூட இப் பத்தியில் அதனைத் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டு, வற்புறுத்தியும் வருகின்றோம். கடைசி நேரம் வரைக் காத்திருக்காமல் – பார்த்திருக்காமல் – தமிழர் தலைமைகள் ஒன்றுபட்டு ஒரு தீர்மானத்துக்கு நேரத்துடன் வர வேண்டும் என நாம் வற்புறுத்துகின்றோம். பலரும் அப்படித்தான் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

நமது அரசியல் தலைவர் ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் இதே விடயத்தை தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரும் மூத்த – பழுத்த – அரசியல்வாதியுமான சம்பந்தனை நேரில் சந்தித்து வலியுறுத்தியிருக்கின்றார். சம்பந்தன் அதற்குக் கூறியுள்ள பதில், நாம் நோக்க வேண்டிய முக்கிய விடயமாகும்.

"இந்தத் தேர்தலில் தமிழர்களின் வாக்குகள் ஒட்டு மொத்தமாக – ஒன்றாக – ஒரே தரப்புக்கு விழ வேண்டும். அது முக்கியமானதுதான். ஆனால் அப்படி விழுவது தென்னிலங்கையில் சில தரப்புகளுக்கு ஒட்டு மொத்தமாக – ஒன்றாக – வாக்குகள் விழுவதை உறுதிப்படுத்தி விடக் கூடாது.

"அதாவது, தமிழர் தாயகத்தில் தமிழ் வாக்குகள் ஒன்றாகத் திரள வேண்டும். ஆனால் அதனைக் காட்டி தென்னிலங்கை வாக்குகள் ஒன்று திரண்டு விட நாம் இடமளிக்கக் கூடாது." –என்று சுருக்கமாகவும், விளக்கமாகவும் அந்தத் தமிழ் அரசியல்வாதிக்கு விளங்கப் படுத்தியிருக்கின்றார் சம்பந்தன்.

அதாவது, தமிழரின் ஒற்றுமைப்படுதலை – ஒன்றிப்பை – ஒன்றுபடுதலை – முன்நிறுத்திக் காட்டி, அதன் மூலம் தென்னிலங்கை ஒன்று திரண்டு விட இடமளிக்கக் கூடாது.

நாம் நேரத்துடன் ஒன்று திரண்டால் அதைக் காட்டியே தென்னிலங்கை நமக்கு எதிராக ஒன்று திரண்டு விடும்.

ஆகையால், தந்திரமாக – கால நேரம் பார்த்து – சமயோசிதமாக – காய் நகர்த்த வேண்டிய விவகாரமாகின்றது இது.

நாங்கள் ஊடகங்கள் அவசரப்பட்டு வற்புறுத்துகிறோம் என்பதற்காகவோ அல்லது எமது அரசியல் தலைவர்கள் சிலரின் உணர்வுபூர்வமான சீற்ற உரைகள் காரணமாகவோ மூத்த அரசியல் தலைவர்கள் அவசரப்பட்டு விடக் கூடாது; அவசரப்பட்டு விடவும் முடியாது; அவசரப்படவும் மாட்டார்கள்.

காலநேரம் பொருந்தி வரும்போது காய் நகர்த்தினால் தான் வெற்றி உறுதியாகும்.

அதற்கான இடத்தையும், வாய்ப்பையும், காலத்தையும் சம்பந்தப்பட்ட அத்தலைவர்களுக்கு நாமே – தமிழ் மக்களே– ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

# 'தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி' வடக்கில் உதயமானது புதிய கட்சி!




வவுனியா, செப்.30

வவுனியாவில் 'தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி' என்ற புதிய கட்சி பட்டதாரிகளால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இக்கட்சியின் தலைவராக எம்.ஆனந்தராஜா, செயலாளராக ஜெ.சந்திரபிரகாஸ், தேசிய அமைப்பாளராக ரி.ரஜனிக்காந் ஆகியோர் செயற்படுகின்றனர். இக்கட்சியின் சின்னமாக இரட்டை மின்சாரக் கோபுரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், கட்சியின் மூவர்ணக் கொடியும் கட்சியின் தலைவரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இக்கட்சி அறிமுக நிகழ்வில் தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி கட்சியின் தலைவர் எம்.ஆனந்தராஜா கருத்து தெரிவிக்கையில் –

எமது மக்களின் உரிமை மற்றும் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இன, மத வேறுபாடு இன்றியும், ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவாலாக்கலை வலியுறுத்தியும் கட்சி செயல்படும். மூவின மக்களை சார்ந்த கட்சியாக சாதி மதங்களைக் கடந்து இக்கட்சி செயலாற்றும். பட்டதாரிகள் சங்கமானது இன்றிலிருந்து கட்சியாக செயல்படும் இப்போது வடமாகாணத்தை பிரதிபலித்து செயல்படும். இக்கட்சி எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்திற்கும் விரிவுபடுத்தப்படும். அத்துடன் தேசிய ஜனநாயக மக்கள் முன்னணி மத்தியில் ஆட்சியில் இருக்கும் கட்சியுடன் சேர்ந்து செயல்படும் எனத் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் சந்திரபிரகாஷ் கருத்து தெரிவிக்கையில்–

கடந்த காலத்தில் சில கட்சிகளுக்காக தேர்தல் காலங்களில் பேரம் பேசலுடன் செயற்பட்டிருந்தோம். ஆனால் தேர்தலின் பின் எமது கோரிக்கைகள் அக் கட்சிகளால் நிராகரிக்கப்பட்டிருந்தன. ஆகவே அதன் விளைவாக பட்டதாரிகள் சங்கம் புதிதாக இக்கட்சியை நிறுவியுள்ளது எனத் தெரிவித்தார். (100)

# ரயில்வே ஊழியருடன் இன்று பேச்சு; தீர்வுக்குத் தீர்க்கமான நடவடிக்கை!

## சரிவராவிட்டால் அது அத்தியாவசிய சேவையாகும்



கொழும்பு,செப்.30

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ரயில்வே தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இன்று மாலை தீர்க்கமான பேச்சு நடைபெறவிருப்பதாக போக்குவரத்து மற்றும் சிவில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

ரயில்வே ஊழியர்கள் போதிய சம்பளத்தைப் பெற்று வரும் நிலையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை நியாயமற்றது எனவும், இன்று இடம்பெறவுள்ள பேச்சுத் தோல்வியடைந்தால், ரயில்வே சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# சஜித்தை ஆதரிக்கும் முன்னாள் பிரபலங்கள்

கொழும்பு, செப். 30

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்க முன்னாள் அமைச்சர்கள் சிலர் தீர்மானித்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் ராஜாங்க அமைச்சர் அசோக வடிகமங்காவ, பொலன்நறுவை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் பிரதியமைச்சர் திலக் மஹாலேக்கம்கே, புத்தளம் மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா, காலி மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் ராஜாங்க அமைச்சர் நந்திமித்ர சொய்சா, கேகாலை மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் ராஜாங்க அமைச்சர் சமந்தா கருணாரத்ன ஆகியோர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர் என முன்னாள் அமைச்சர் உபாலி பியசோம தெரிவித்துள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டு ரீதியான அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த முன்னாள் அமைச்சர் உபாலி பியசோம, அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட கடந்த 26 ஆம் திகதியே சிறிகொத்த விற்குச் சென்று சஜித்தை சந்தித்து அவரது தேர்தல் பணிகளில் பங்களிப்பு வழங்க இணக்கம் வெளியிட்டிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் கட்சியில் இணைக்கும் பொறுப்பை உபாலி பியசோம மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோருக்கு அமைச்சர் சஜித் பிரேமதாஸ வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**நாளை** 01.10.2019 செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: பூரம் பி.இ 1.00 வரை | இராகுகாலம் : 10.32 – 12.02
திதி : சதுர்த்தி பி. இ 3.05 வரை | சுப நேரம் : 6.02 – 7.32

# சஜித் பிரேமதாஸவை பாராட்டுகிறார் விக்கி



யாழ்ப்பாணம், செப். 30

ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தைத் தேர்ந்தெடுத்தமை எனக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள கேள்வி – பதில் அறிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு: –

**கேள்வி:-** சஜித்துக்கு ஜனாதிபதி வேட்பாளராக வரத் தற்போது பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது. அவரை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? பதவிக்கு வந்தால் அவர் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார் என்பது என்ன நிச்சயம்?

**பதில்:-** சஜித்தைத் தேர்ந்தெடுத்தமை எனக்குத் தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. அவர் இளம் வயதினர். கொழும்பு றோயல் கல்லூரியில் தாராள மனப்பாங்குடைய ஆரம்பகாலக் கல்வியைப் பெற்றவர். ஆனால் அவர் காலத்தில் வகுப்புகள் மொழி ரீதியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. எங்கள் காலத்திலோ சகல இன மக்களும் ஒரே வகுப்பில் இருந்தோம். ஒரு மொழி எம்மைப் பிணித்தது (ஆங்கிலம்). ஆனால் அடிப்படையில் கொழும்பு றோயல் கல்லூரிக் கல்வியும், அவரின் பௌத்த மதப் பின்னணியும் மேலும் இலண்டன் பொருளாதாரக் கல்லூரியிலும் வேறு கல்லூரிகளிலும் அவர் பெற்ற கல்வியுமானது அவருக்கு 'வாழ்; மற்றவரையும் வாழவிடு' என்ற மனோநிலையைக் கொடுத்திருக்கும் என்று நம்புகின்றேன்.

தருண சவிய மூலம் இளைஞர்களுடன் அவர் வெற்றி கண்டுள்ளார். ஜன சுவய, சசுனட அருண போன்றவற்றையும் அவர் நடத்தியுள்ளார். அவருக்கு ஒரு கெட்டியான பௌத்த பின்னணி இருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால் ஒரு சில விடயங்கள் அவர் தமிழர் மீது தன்னுறுதியில்லாத மனோநிலையைக் கொள்ளக் கூடியவாறு அமைந்திருக்கலாம். அவரின் தந்தையார் தமிழ்ப் போராளிகளின் வன்முறைக்கு இலக்கானார் என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை ஒரு காரணம்.

அடுத்தது நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்தத்துக்கும் புத்தரின் போதனைகளுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை அவர் உணர்ந்து கொண்டுள்ளாரோ தெரியவில்லை. எமது அரசியல் யாப்பானது புத்தரின் போதனைகளை ஆங்காங்கே உட்புகுத்தியிருக்கலாம். ஆனால் நிறுவனப்படுத்தப்பட்ட பௌத்தத்திற்கு முன்னுரிமை கொடுத்தமை தவறென்று நான் பல முறை கூறியுள்ளேன். நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்தம் வேறு புத்த பெருமானின் போதனைகள் வேறு. முல்லைத்தீவில் பொதுபலசேனா இயற்றிய கூத்துக்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட பௌத்தத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை வெளிக்கொண்டுவருகின்றன. அவற்றின் குற்றவியல் தன்மையையும் வெளிக்காட்டி நிற்கின்றன.

மேலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அவரின் 'இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு' என்ற அதி தீவிர சிந்தனை தடையாக இருக்கலாம். ஆனால் அவர் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்குரிய நாடு அல்ல. புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே இந்த நாடு சைவத் தமிழ் நாடாக இருந்தது. பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதே தமிழ் இந்துக்கள் மத்தியில் தான். மேலும் சிங்கள மொழியானது நடைமுறைக்கு வந்தது கி.பி. 6ஆம் அல்லது 7ஆம் நூற்றாண்டிலேயே. இன்று 2000 ஆண்டுகளுக்கு மேலான தொல்பொருள் சார்ந்த பௌத்த எச்சங்கள் என்று கூறப்படுபவை தமிழ் பௌத்தர்கள் கால எச்சங்கள்.

இன்று நாட்டின் 75 சதவிகித மானவர்கள் சிங்கள பௌத்தர்கள் என்பது உண்மையே. ஆனால் வடகிழக்கின் 85 சதவிகிதத்திலும் அதிக மானவர்கள் தமிழ் பேசும் மக்களே. எங்களைப் பொறுத்தவரையில் எந்த மதத்திற்கும் முன்னுரிமை கொடுக்க



வேண்டிய அவசியம் இல்லை என்பதே எமது நிலைப்பாடு. வடக்கில் இந்து சமயமானது ஆதிகாலந் தொட்டு கோலோச்சி வந்துள்ளது. அது மற்றைய மதங்கள் யாவற்றையும் மதிக்கும் ஒரு சமயம். 'உண்மை ஒன்று; அதை ஞானிகள் பல நாமங்களால் குறிப்பிடுகின்றார்கள்' என்பதே இந்து மக்களின் கருத்து வெளிப்பாடு. அதனால்தான் வடக்கு – கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் தமக்கு பிரிக்கப்படாத நாட்டினுள் சுயாட்சியைக் கோருகின்றார்கள்.

அவரின் தந்தையை நான் அறிந்திருந்தேன். தன் தந்தையாரின் செயலாற்றல் திறமையை மகன் பெற்றிருந்தால் இதுவரையில் 'தேசிய அபிமானிகள்' என்ற வகையில் ஆட்சி ஓச்சியவர்களில் இருந்தும் வித்தியாசமான ஒருவராக சஜித் சிறந்து விளங்க முடியும்.

இதுவரையில் ஆட்சி ஓச்சியவர்கள் அறிவுடைமையையும் உணர்வுடைமையையும் வெளிக்காட்ட முடியாதவர்களாகவே இருந்தார்கள். தன்னால் பின்னப்பட்ட மேற்கூறப்பட்ட வலையில் இருந்து சஜித் விடுபட்டாரானால் எல்லா மக்களும் பாராட்டும் அதி சிறந்த ஜனாதிபதியாக வரக்கூடிய தகைமைகள் கொண்டவர் அவர் என்பது எனது கருத்து. ஜனாதிபதியின் அதிகாரங்கள் அண்மையில் கத்திரிக்கப்பட்டிருந்தாலும் அவர் தனது சிறப்பினை வெளிக்காட்டக்கூடியவர் என்பதே எனது கருத்து – என்றுள்ளது. (ஐ)

# சர்வமதக் குழுவினர் கலந்துரையாடல்



வவுனியாவில் சர்வமதக் குழுவினரின் கலந்துரையாடல் இடம்பெற்றது. வவுனியா, இரண்டாம் குறுக்குதெருவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில்





இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, உதிர்த்த ஞாயிறு தினத்தில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து சர்வ மத குழுவால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டமையுடன், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



அத்துடன் அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மத நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டு அவர்களினூடாக மத நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில், இலங்கை தேசிய சமாதான பேரவையின் செயற்திட்ட முகாமையாளர் சமன் செனவிரத்ன, வளவாளர் ரசிகா செனவிரத்ன, உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், மதகுருமார்கள், சர்வமதக் குழுவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஞானசாரரின் இனவாதக் கருத்து தமிழ் மக்களைப் பயமுறுத்தாது

## ரெலோ செயலாளர் சிறிகாந்தா காட்டம்



யாழ்ப்பாணம், செப்.30

ஞானசார தேரரின் இனவாத கருத்துக்கள் தமிழ் மக்களை பயமுறுத்தாது என காட்டமாகத் தெரிவித்துள்ளார் ரெலோ அமைப்பின் செயலாளர் என்.சிறிகாந்தா.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை சிங்கள பௌத்த நாடு. இதனை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டும் இந்த நாட்டில் இருக்கலாம். ஏற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் உடைமைகளுடன் தாரளமாக வேறு நாடுகளுக்கு செல்லலாம் என ஞானசார தேரர் கூறியிருக்கிறார்.

தேரரின் பச்சையான இனவாதக் கருத்துக்கள் ஆச்சரியமானவை அல்ல. அவரிடமிருந்து வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது.

ஆனால் எமது கேள்வியெல்லாம், குடியகல்வு அதிகாரங்கள் எப்போது, எந்தச் சட்டங்களின் கீழ் கொடுக்கப்பட்டது என்பதுதான்.

ஞானசார தேரர் வெறும் முகமூடி தான். அந்த முகமூடியின் பின்னால் வலிமையான இனவெறி சக்திகள் ஒளிந்து நின்று செயற்பட்டு வருகின்றன என்பதை நாமறிவோம்.

ஞானசார தேரர் இவ்விதம் இன வெறிக் கூச்சல்களை எழுப்பிக் கொண்டிருப்பதையிட்டு, அவருக்குப் பொது மன்னிப்பளித்தவரும், பொலிஸ்துறைக்குப் பொறுப்பான பாதுகாப்பு அமைச்சை நிர்வகித்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி என்ன சொல்லப் போகிறார்?

அதைவிட, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரை முன்வந்துள்ள மூன்று பிரதான வேட்பாளர்களும் என்ன சொல்ல போகிறார்கள்?

ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில், தமிழ் மக்கள் – ஏன் முஸ்லிம் மக்கள் கூட – ஒரு நிலைப்பாட்டுக்கு வருவதற்கு, இவர்களின் பதில்கள் கட்டாயமானவை.

அதேநேரத்தில் தமிழ் மக்களிற்கு, அவர்களின் சட்டபூர்வமான உரிமைகள் என்னவென்பது நன்றாக தெரியும். ஐம்பதுகளின் நடுப்பகுதியில் ஆரம்பித்து, கே.எம்.பி.ராஜரத்ன, எவ்.ஆர். ஜயசூரிய, எச்.எல்.மேத்தானந்த, ஆர்.ஜி.சேனநாயக்க, சிறில் மத்யூ போன்றோரின் பேரினவாத கர்ச்சனைகளை நேரில் கண்டவர்கள். அதன் தொடர் விளைவுகள் என்னவென்பதையும் மறக்காதவர்கள்.

ஞானசார தேரரின் இனவாத கூச்சல்களையிட்டு தமிழர்கள் ஒரு போதும் மிரள மாட்டார்கள். அவரின் பயமுறுத்தல்கள் அவர்களை எதுவும் செய்து விடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளில் இந்தியாவின் மதிப்பு பல மடங்கு அதிகரிப்பு

## பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்

வெளிநாடுகளில் இந்தியாவின் மதிப்பு பலமடங்கு அதிகரித்துள்ளதாகப் பிரதமர் மோடி பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி அங்கு ஹவுடி மோடி உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அதிபர் டிரம்ப் மற்றும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார். ஐ.நா. சபையில் உரையாற்றிய பின், நியூயோர்க்கில் இருந்து புறப்பட்ட மோடி நேற்றுமுன் தினம் இரவு டில்லி திரும்பினார். டில்லி பாலம் விமான நிலையத்தில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்தில் தம்மைச் சந்திக்கக் கடல் அலைபோல் திரண்ட தொண்டர்களிடம் உரை நிகழ்த்திய மோடி, தமக்குக் கிடைத்த வரவேற்புக்கும் உற்சாகத்திற்கும் நன்றி தெரிவித்தார். தம்மீது அன்பைப் பொழிந்த அமெரிக்க இந்தியர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தமது பயணத்தால் பல்வேறு நாடுகளின் தலைவர்களைச் சந்திக்க முடிந்ததாகவும் இந்தியாவின் மதிப்பு வெளிநாடுகளில் பல மடங்கு உயர்ந்திருப்பதாகவும் மோடி தெரிவித்தார். 2014 ஆம் ஆண்டு தாம் ஐ.நா. சபை சென்றதற்கும் இப்போது சென்றதற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு இருப்பதாகவும் மோடி தெரிவித்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 28 ஆம் திகதி நடைபெற்ற துல்லியத் தாக்குதல்களில் ஈடுபட்ட வீரர்களின் துணிவை நினைவு கூர்ந்த மோடி, கடந்த ஆண்டு இதே நாளில் விடிய விடிய துல்லியத் தாக்குதல்களை மேற்பார்வையிட்டார் எனத் தெரிவித்தார். இந்தியா உலகிற்கு தனது வலிமையை உணர்த்திய நாள் அது என்றும் மோடி குறிப்பிட்டார்.



இதனிடையே, வர்த்தகத்திற்கு ஏற்ற 20 வளர்ந்த நாடுகளின் பட்டியலில் இடம்பெற்று இந்தியா முன்னேறியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

## உத்தரகாண்டில் நிலச்சரிவால் வான் கவிழ்ந்து ஐந்து பேர் பலி

டேராடூன், செப்.30

உத்தரகாண்ட் மாநிலத்தில் நிலச்சரிவு காரணமாகச் சாலையில் சென்றுகொண்டிருந்த வான் மீது பாறைகள் விழுந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.



உத்தரகாண்ட் மாநிலம் டென்டாரா பகுதியில் உள்ள மலைப்பாங்கான சாலையில் ஒரு வான் நேற்றுச் சென்று கொண்டிருந்தது. பாறைகள் நிறைந்த சாலை பகுதியில் வான் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

அப்போது மலை மேலிருந்த பாறைகள் சரிந்து வேகமாக உருண்டு வந்து சாலையில் சென்று கொண்டிருந்த வான் மீது விழுந்தது. இதனால் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வான் தலைகீழாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் வானில் பயணம் செய்த 5 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 5 பேர் படுகாயமடைந்தனர்.

## மோடி அரசாங்கத்தின் சாதனைகளை முதுகில் ஓவியமாக வரைந்த பெண்கள்

குஜராத் மாநிலம் சூரத்தில் நவராத்திரி விழாவையொட்டி, பெண்கள் சிலர் மோடி அரசின் சாதனைகளை முதுகின் மீது ஓவியமாக வரைந்து கொண்டனர்.

வடமாநிலங்களில் நவராத்திரி விழா கோலாகலமாக தொடங்கியுள்ளது. இதையொட்டி கோவில்களிலும் வீடுகளிலும் பொதுமக்கள் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குஜராத் மாநிலம் சூரத்தில் நவராத்திரி திருவிழாவையொட்டி பெண்கள் சிலர் வண்ண ஓவியங்களை தங்கள் முதுகின் மீது வரைந்து கொண்டனர்.




இரண்டாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள பிரதமர் மோடி ஆட்சியின் சாதனைகளை விளக்கும் விதமாக அவர்கள் ஓவியங்களை வரைந்திருந்தனர்.

## காஷ்மீர் தீவிரவாதிகளை சுட முன் சரன் அடைய அதிகாரி கோரிக்கை

### புதிய வீடியோ வெளியானது

ஜம்மு காஷ்மீர் மாநிலம் ராம்பனில், வீட்டில் பதுங்கி இருந்த தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னர், அவர்களை சரணடையுமாறு பொலிஸார் அறிவுறுத்தும் வீடியோ காட்சி வெளியாகியுள்ளது.

ராம்பன் மாவட்டம் படோட் நகரில் உள்ள ஒரு வீட்டில் புகுந்த தீவிரவாதிகள், வீட்டின் உரிமையாளரை பிணைக் கைதியாக பிடித்து வைத்தனர். இதை அடுத்து இராணுவம் மற்றும் மத்திய ரிசேர்வ் பொலிஸ் படையுடன், மாநிலப் பொலிஸார் அங்கு விரைந்தனர்.

தீவிரவாதிகளுக்கும் வீரர்களுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. முடிவில் 3 தீவிரவாதிகள் வேட்டையாடப்பட்டனர். தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மரைச் சேர்ந்த ராஜேந்திர சிங் என்ற வீரர் வீரமரணம் அடைந்தார். சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் ஒருவன், ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்பைச் சேர்ந்த தேடப்பட்டு வந்த தீவிரவாதியான ஒசாமா என்று ராணுவம் கூறியுள்ளது.

இந்நிலையில், தீவிரவாதிகள் கொல்லப்படுவதற்கு முன்னதாக அவர்களை சரண் அடையுமாறு ராம்பன் மாவட்டத்தின் மூத்த காவல் கண்காணிப்பாளரான அனிதா சர்மா, ஒலிப்பெருக்கி மூலம் அறிவுறுத்தும் வீடியோ வெளியாகியுள்ளது.



## 'பியர்' குடிக்க ஆசைப்பட்டு சிக்கி கொண்ட நாகபாம்பு!



ஒடிசா மாநிலம் மயூர்கஞ்ச் மாவட்டத்தில் பியர் போத்தலுக்குள் ஒரு நாகபாம்பு சிக்கியுள்ளது.

மிகவும் வித்தன்மை மிக்க ராஜநாகமாக அது கருதப்படுகிறது.

பாரிபடா காட்டுப் பகுதியில் பியர் குடிக்க ஆசைப்பட்ட இந்த நாக பாம்பு அந்த போத்தலுக்குள் சிக்கிக் கொண்டது. வனப்பகுதிக்குள் குடித்துக் கும்மாளமிட்டு சென்ற சிலர் வீசியெறிந்த ஒரு போத்தலுக்குள் இந்த பாம்பு பியர் ருசி பார்க்கச் சென்று மாட்டிக் கொண்டது. இதனைக் கண்ட உள்ளூர் கிராமவாசி ஒருவர் வனத்துறைக்கு தகவல் அளித்தார். அவர்கள் விரைந்து வந்து பாம்பை மீட்டனர்

## நீட் தேர்வை தடை செய்ய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்

### மு.க.ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, செப்.30

நீட் தேர்வுக்கு தடை விதிக்க மத்திய அரசுக்கு அழுத்தம் தரவேண்டும் என தமிழக அரசை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது டுவிட்டர் பதிவில் இது தொடர்பில் கூறியுள்ளவை வருமாறு :-



போலி இரட்டை இருப்பிட சான்றிதழ், வினாத்தாள்களில் தவறான மொழிபெயர்ப்பு, மாணவர்கள் ஆள் மாறாட்டம் என இந்திய இளைஞர்களின் கனவுகளை நீட் தேர்வு சிதைத்துக் கொண்டிருக்கிறது. அனைத்து முறைகேடுகள் குறித்தும் உயர்மட்ட விசாரணை நடத்த இந்திய அரசு உடனடியாக உத்தரவிட வேண்டும்.

அனிதாவின் மரணத்தில் இழைக்கப்பட்ட அநீதி தொடங்கி, சமீபத்திய ஆள்மாறாட்ட முறைகேடு வரை, நீட் தேர்வு நம் மாணவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. எனவே, நீட் தேர்வுக்கு தடை விதிக்க அ.தி.மு.க. அரசு உடனடியாக மத்திய அரசுக்கு அழுத்தம் தர வேண்டும். - என குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவில் பஸ் – லொறி மோதல் 36 பேர் பலி; 36 பேர் படுகாயம்



பெய்ஜிங்,செப்.30

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் லொறி – பஸ் மோதிய விபத்தில் 36 பேர் பலியானமை அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனா நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஜியாங்சு மாகாணத்தில் 75 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்த பஸ் ஒன்றின் டயரில் திடீரென காற்று இறங்கியதால் பஸ் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த லொறி மீது வேகமாக மோதியது.

இந்த விபத்தில் 36 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் 36 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற மீட்புப் படையினர் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் என சின்சுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

சீனாவில் போக்குவரத்து விதிமுறைகள் கடுமையாக பின்பற்றப்படுவதில்லை. அதன் காரணமாகச் சாலை விபத்துகள் பரவலாக ஏற்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற சாலை விபத்துக்களில் 58 ஆயிரம் பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# செவ்வாய் கோளில் உங்கள் பெயரை பதிவு செய்யலாம்!



செவ்வாய்க் கிரகத்தில் மக்கள் தங்களின் பெயரை பதிவு செய்ய அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா ஒரு வாய்ப்பு வழங்கி உள்ளது.

இதுகுறித்து நாசா விடுத்துள்ள அறிக்கையில்-

செவ்வாய்க் கிரகத்தை ஆராய அடுத்த ஆண்டு அனுப்பப்படும் செயற்கை கோளில் ஒரு மைக்ரோசிப் வைக்கப்படும் என்றும் இந்த சிப் செவ்வாய்க் கிரகத்தில் வைக்கப்பட உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பப்படும் மைக்ரோ சிப்பில் பொறிக்க, உலகெங்கிலும் உள்ள மக்கள், தங்கள் பெயர்களை ஒன்லைனில் சமர்ப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெயர்களை https://mars.nasa.gov/participate/send-your-name/mars2020 என்ற வலைப்பக்கத்தில் செப்ரெம்பர் 30 இற்கு முன் சமர்ப்பிக்கலாம் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

சமர்ப்பிக்கப்பட்ட பெயர்களை மதிப்பாய்வு செய்யப் பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு, நாசாவின் ஜெட் ப்ராபல்ன் ஆய்வகத்தில் உள்ள மைக்ரோ டிவைசஸ் ஆய்வகம் எலக்ட்ரான் கதிரை பயன்படுத்தி சிலிக்கான் சிப்பில் பெயர்களை பதிவு செய்யும் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதுவரை 98 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் பெயர்களை சமர்ப்பித்துள்ளனர். செவ்வாய் கிரகத்தை ஆராய ரோவர் 2020 என்ற செயற்கைகோள் அடுத்த ஆண்டு ஜூலை மாதத்தில் ஏவப்பட உள்ளது, இது பெப்ரவரி 2021க்குள் செவ்வாய்க் கிரகத்தைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆளில்லா விமானங்களை தாக்கி வீழ்த்தும் நவீன கருவியைக் கண்டுபிடித்ததாம் அமெ.



ஆளில்லா உளவு விமானங்களைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் நவீன கருவியை அமெரிக்கா கண்டறிந்துள்ளது.

ரேதியான் என்ற ஆயுதத் தயாரிப்பு நிறுவனம் தயாரித்துள்ள இந்தக் கருவிகளை ஒரு கோடி 62 லட்சத்து 80 ஆயிரம் டொலர்கள் மதிப்பில் அமெரிக்க இராணுவம் வாங்கியுள்ளது.

ரேடார் வடிவில் இருக்கும் இந்த வகை கருவியில், ஆளில்லா உளவு விமானங்கள் வரும் திசையைக் கண்டறிந்து குறிப்பிட்ட தொலைவுக்கு முன்னரே மின் காந்த அலைகளை செலுத்துவதன் மூலம் அந்த ட்ரோன்களை வீழ்த்த முடியும் என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தும் வாய்ப்பு முற்றிலும் தடுக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

முன்னதாக சவுதியில் கடந்த வாரம் ஆளில்லா விமானங்கள் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் எண்ணெய் கிணறுகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின. அப்போது அங்கு வைக்கப்பட்டிருந்த அமெரிக்காவின் ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள் வேலை செய்யாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

# பதினேழு ஐ.எஸ். தீவிரவாதிகளை லிபியாவில் அமெ. கொன்று குவிப்பு



திரிபோலி,செப்.30

லிபியா நாட்டில் அமெரிக்க இராணுவத்தினர் நடத்திய வான்வழி தாக்குதலில் 17 ஐ.எஸ் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

லிபியாவில் 2011 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது, முக்கிய அரசியல் தலைவரும், முன்னாள் லிபிய அதிபருமான முவம்மர் கடாபி கொல்லப்பட்டார். கடாபியின் மறைவுக்குப் பிறகு லிபியாவில் ஐ.எஸ். அமைப்பு வலுவாக காலூன்றியது.

அதன் பின்பு பல ஆண்டுகளாக தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் சம்பவங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்நிலையில் லிபியா அரசுப் படைகளுடன் இணைந்து அமெரிக்க ராணுவத்தின் ஆபிரிக்கக் கொமாண்டிங் குழு நடத்திய வான்வழி தாக்குதலில் 17 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

பொதுமக்களை அச்சுறுத்திவரும் தீவிரவாத அமைப்புகள் லிபியாவில் காலூன்ற இனி இராணுவம் அனுமதிக்காது. அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு தினங்களுக்கு முன்பு (செப். 26) நடத்திய வான் வழி தாக்குதலில் ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த 17 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். லிபியாவில் அரசியல் ஸ்திரத்தன்மையை கொண்டு வரவும், தீவிரவாத அமைப்புகளைத் தடுக்கவும் மேற்கொள்ளப்படும் தூதரக மட்ட முயற்சிகளுக்கும் அமெரிக்க இராணுவம் ஆதரவு அளித்து வருகிறது. – எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

■ பனங்காட்டான்

# யார் ஜனாதிபதியாக வந்தாலென்ன?

# ரணிலுக்குப் பதவி கிட்டுவது நிச்சயம்

ஜனாதிபதி வேட்பாளராவதைவிட கட்சியின் தலைவர் பதவியை தம்மிடம் வைத்திருப்பதில் ரணில் ஏன் அக்கறை காட்டுகிறார்? அப்பதவி தம்மிடம் இருந்தாலே பிரதமர் அல்லது எதிர்க்கட்சித் தலைவராகலாம் என்பது அவருக்குத் தெரியும். சஜித் வென்றாலென்ன தோற்றாலென்ன தமக்குரிய இடம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் கட்சித் தலைமை தம்மிடம் இருக்க வேண்டும் என்பதை அறிந்தே ரணில் காய்களை நகர்த்துகிறார்.

முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவிலை மையப்படுத்தி சிங்கள பௌத்த இனவாத வெறியாட்டம் வேகம் கொண்டுள்ளது.

மகரகமவில் நடைபெறவேண்டிய பௌத்த பிக்குவின் இறுதிச் சடங்கை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளவுக்கு எடுத்துச் சென்று, நீதிமன்ற உத்தரவையும் மீறி அடாத்தாக தகனம் செய்து மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நடத்தியுள்ளனர் பௌத்த பிக்குகள்.

இந்த அடாவடித்தனத்துக்கு தலைமை தாங்கியவர் நன்கறியப்பட்டவரான ஞானசார தேரர். காவியுடை என்பது சட்டத்துக்கு அப்பாற்பட்டதென்றும், பௌத்த நாடான இலங்கையில் சட்டம் அதற்கு உட்பட்டதென்றும் சவால் விட்டு வருபவர் இவர்.



ஏற்கனவே நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றில் பல வருட சிறைவாசம் பெற்று உள்ளே இருந்த ஞானசாரருக்கு மன்னிப்புக் கொடுத்து வெளியே கொண்டு வந்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அகப்பை பிடிப்பவர் நம்ம ஆள் என்ற பழமொழியை ஞாபகமூட்டும் வகையில் மைத்திரியின் தோழன்பு அவரை தாம் நினைப்பவற்றைச் செய்பவராக மாற்றியுள்ளது.

முல்லைத்தீவைச் சிங்களமயமாக்குவதற்காக அங்கு குடியேற முயற்சிக்கும் ஞானசார தேரருக்கு ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரிலுள்ள சிங்கள பௌத்த மதவாதிகள் குழுவொன்று தேவையான வளங்களைக் கொடுத்து வருகின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

போர்க்குற்றவாளிகளில் ஒருவரான சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாகியிருப்பதும், இன்னொரு போர்க்குற்றவாளியான கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதியாக வரத் துடிப்பதும் ஞானசார தேரருக்கும் அவரது காவியுடைக் கூட்டாளிகளுக்கும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இலங்கையில் சிங்களவர் தமிழருக்கிடையேயானது இனப்பிரச்சினை, அரசியல் பிரச்சினை என்ற கட்டம் மாறி மதப்பிரச்சினையாக மாற்றப்பட்டு வரும் இவ்வேளையில் அரசாங்கம் கண்மூடிக் கொண்டு மௌன அங்கீகாரம் வழங்கி வருகிறது.

இதற்கு உறுதுணையாக கொழும்பின் சிங்கள ஆங்கில ஊடகங்கள் நீராவியடிப் பிள்ளையார் ஆலய விவகாரத்தை இருட்டடிப்புச் செய்து வருகின்றன. கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங் களுக்கு இது தெரிந்து விடக்கூடாதென்பதில் இந்த ஊடகங்கள் காட்டிவரும் அக்கறைகூட ஒருவகையில் இனவாத வடிவமே.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒன்றரை மாதங்களே இருக்கின்ற இவ்வேளையில் தமிழர் தாயகத்தில் பௌத்த ஆதிக்கம் தலைவிரித்தாட, தெற்கில் சிங்களக் கட்சிகள் தங்களின் ஜனாதிபதி வேட்பாளர்களை நிர்ணயம் செய்வதில் அக்கறை கொண்டுள்ளன.

ஒகஸ்ட் 11ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் என்ற பெயரில் ராஜபக்ஷ குடும்ப பிரதிநிதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டார்.

இக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. கோட்டாபய வெற்றி பெறுவாரானால் மஹிந்தவே அடுத்த ஆட்சியில் பிரதமர். மகன் நாமல் ராஜபக்ஷவுக்கும் இளைய சகோதரர் பஸில் ராஜபக்ஷவுக்கும் அமைச்சர் பதவிகள். அங்குமிங்குமாக ஒட்டியிருக்கும் உறவினர்களுக்கும் பல பதவிகள் உண்டு.

அப்படியானால், ராஜபக்ஷ குடும்ப ஆட்சி மீண்டும் தலைதூக்க கோட்டாபயவின் வெற்றி வழிவகுக்கும்.

ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஜே.வி.பி.யினர் கொழும்பு காலிமுகத்திடலில் மாபெரும் பேரணியொன்றை நடத்தி அனுர குமார திசநாயக்கவை வேட்பாளராக அறிவித்தனர். 20 வருடங்களுக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.வி. இறங்கியுள்ளது.

இடதுசாரிக் கட்சியினரதும், இளம் வாக்காளர்களினதும் ஆதரவு கிடைக்குமானால் சுமார் எட்டு முதல் பத்து லட்சம் வரையான வாக்குகளை ஜே.வி.பி. பெறக்கூடும். இது கோட்டாபயவின் வாக்கு வங்கியை குறையச் செய்யும்.

கடந்த பல மாதங்களாக இழுபறியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியை தலைமையாகக் கொண்ட முன்னணியின் வேட்பாளர் தெரிவு ஒரு முடிவுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




எந்த வகையிலும் நம்ப முடியாததாக சஜித் பிரேமதாசவை வேட்பாளராக கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவே முன்மொழிந்து பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துள்ளார் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்க குத்துக்கரணம் அடித்தாரா அல்லது யு ரேண் போட்டாரா என்பது எவருக்குமே சரியாகப் புலப்படவில்லை.

இலங்கை அரசியலில் கிழட்டு நரி என்ற பட்டத்தில் பிரபல்யமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பெறாமகனான ரணில் விக்கிரமசிங்கவை குள்ளநரி என்றே பலரும் குறிப்பிடுவர். அப் பெயருக்கேற்ப மற்றவர்களுக்குப் புலப்படாத திட்டமொன்றின் பின்னணியில் சஜித் வேட்பாளராக்கப்பட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நம்பமுடியாத ஆனால் நம்பியே ஆக வேண்டிய ஒரு விடயம் இதுவாகும். அதனை சுருக்கமாக தெரிந்து கொள்வது காலத்தின் கட்டாயம்.

அரசியலில் எதிரும் புதிருமாகக் காட்சி தரும் ரணிலும் மஹிந்தவும் உள்ளார்ந்த நட்புக் கொண்ட அரசியல்வாதிகள். இரு வேறு கட்சிகளின் தலைவர்களான போதிலும் இருவருக்கும் பாதிப்பு ஏற்படாமல் ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்வது இவர்களிடையே எழுதாத ஒப்பந்தம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்த அன்றிரவு அரசுக்குச் சொந்த மான உலங்குவானூர்திகளை வழங்கி மிகவும் பௌத்திரமாக மஹிந்தவையும் அவரின் குடும்பத்தினரையும் அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைத்தவர் ரணில்.

நல்லாட்சிக் காலத்தில் பல வழக்குகளில் மஹிந்த – அவரது மனைவி – அவரது மகன்மார் – மற்றும் கோட்டாபய ஆகியோர் மீது எந்த வழக்குகளும் பாயாது சகல பாதுகாப்புகளையும் அளித்தவரும் ரணில்தான்.

( 13 ஆம் பக்கம் பார்க்க...)

> "அரசியலில் எதிரும் புதிருமாகக் காட்சி தரும் ரணிலும் மஹிந்தவும் உள்ளார்ந்த நட்புக் கொண்ட அரசியல் வாதிகள். இரு வேறு கட்சிகளின் தலைவர்களான போதிலும் இருவருக்கும் பாதிப்பு ஏற்படாமல் ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொள்வது இவர்களிடையே எழுதாத ஒப்பந்தம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைந்த அன்றிரவு அரசுக்குச் சொந்தமான உலங்குவானூர்திகளை வழங்கி மிகவும் பௌத்திரமாக மஹிந் தவையும் அவரின் குடும்பத்தின ரையும் அம்பாந்தோட் டைக்கு அனுப்பி வைத்தவர் ரணில்.

# ஐ.நா. தொடரில் பங்குபற்றும் கடைசி வாய்ப்பை தாமே துறந்தார் இலங்கை ஜனாதிபதி மைத்திரி!

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம், கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா பொதுச்சபையின் 74 ஆவது கூட்டத்தொடரின் பொது விவாதம், செப்ரெம்பர் 24ஆம் நாள் ஆரம்பித்தது. இந்த விவாதம் இன்றுடன் முடிவடைகிறது.

இந்த கூட்டத்தொடரில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டிருந்தார். அதற்கான ஒழுங்குகளை ஜனாதிபதி செயலகம் மேற்கொண்டிருந்தது.



கடைசி நேரத்திலேயே, ஜனாதிபதியின் பயணம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு, இலங்கைக் குழுவுக்கு வெளிவிவகாரச் செயலர் ரவிநாத் ஆரியசிங்க தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதில் இருந்து ஜனாதிபதி விலகிக் கொண்டமைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

எனினும், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரங்களைக் கருத்தில் கொண்டே, அமெரிக்க பயணத்தை மைத்திரிபால சிறிசேன கடைசி நேரத்தில் ரத்துச் செய்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தால், நாட்டின் மிக முக்கியமான அரசியல் நகர்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், அவரால் நாட்டில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும்.

அதேவேளை இம்முறை ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தொடரில், சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாஹூ, வெனிசுவேலா அதிபர் நிகொலஸ் மதுரோ உள்ளிட்ட பல தலைவர்கள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தற்போதைய பதவிக்காலத்தில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றக் கிடைத்த வாய்ப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## லெபனானில் ஐ.நா. படையில் பணியாற்றும் இலங்கைப் படைகள் நாடு திரும்புகின்றன!

லெபனானில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கைப் படையினர், அடுத்த மாதம் முழுமையாகத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்குப் பதிலாக இந்தோனேசிய இராணுவத்தினரை ஐ.நா பணியில் அமர்த்தவுள்ளதாக இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லெபனானில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கைப் படையணியினரின் பணிக்காலம் முடிவுக்கு வரவுள்ள நிலையிலேயே, அவர்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இலங்கை இராணுவத் தளபதியாக லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமையை அடுத்து, ஐ.நா அமைதிப்படைக்கு இலங்கைப் படையினரை புதிதாக சேர்த்துக் கொள்வதில்லை என்று ஐ.நா முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில், லெபனானுக்கு அனுப்பப்படவிருந்த இலங்கை இராணுவ அணியின் பயணம் நிறுத்தப்பட்டுள்ளது.



## வேட்புமனுத் தாக்கலானதும் பரப்புரைப் போர் ஆரம்பம்!

### சஜித்: காலிமுகத் திடலில் கோட்டா: அநுராதபுரத்தில்

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் மோதவுள்ள சஜித் பிரேமதாஸவும், கோட்டாபய ராஜபக்ஷவும், அடுத்த மாதம் கொழும்பு காலிமுகத்திடலிலும், அநுராதபுரத்திலும் தமது பரப்புரைப் பேரணிகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

ஐ.தே.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சஜித் பிரேமதாஸ, கூட்டணியைப் பலப்படுத்தி, தமக்கான ஆதரவை உறுதிப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

கட்சியில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் உங்வாங்குவதில் அவர் கவனம் செலுத்தியுள்ளார்.



ஏற்கனவே ஐ.தே.கவில் இருந்து விலகியிருந்த முன்னாள் பொதுச் செயலர் திஸ்ஸ அத்த நாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.நாவின்ன ஆகியோர் மீண்டும் ஐ.தே.க வுக்கு திரும்பி, சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், வரும் 7ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், ஒக்ரோபர் 10ஆம் திகதி சஜித் பிரேமதாஸ பரப்புரையை ஆரம்பிக்க வுள்ளார்.

அன்று பிற்பகல் 1.30 மணியளவில் காலி முகத்திடலில் பேரணியை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பரப்புரைப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தீவிர பரப்புரைப் பேரணிகளை நடத்தவுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷவின் பரப்புரை அநுராதபுரத்தில் வரும் ஒக்ரோபர் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அநுராதபுரம் சிறிமாபோதியிலும் ருவன்வலிசாயவிலும் காலையில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவும் மஹிந்த ராஜபக்ஷவும், அநுராதபுரம் சல்ஹாடோ மைதானத்தில் நடக்கும் பேரணியில் பங்கேற்கவுள்ளனர்.

இதையடுத்து இரண்டு பிரதான வேட்பாளர்களும் மாவட்ட மற்றும் தொகுதி ரீதியான பரப்புரைப் பேரணிகளில் பங்கேற்கவுள்ளனர்.

## சவேந்திர சில்வாவைத் தளபதியாக நியமித்தமை நாட்டுக்குப் பேரிழப்பு!

### சுட்டிக்காட்டுகின்றார் சிவாஜிலிங்கம்




யாழ்ப்பாணம்,செப்.30

போர்க் குற்றவாளியாக சர்வதேச சமூகத்தினால் இனங்காணப்பட்ட சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டமை காரணமாக அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் பல்லாயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அண்மையில் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவினுடைய நியமனம் சம்பந்தமாக பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருந்த நேரத்தில் இலங்கையிலிருந்தும் நாமும் கண்டனங்களை பதிவு செய்திருந்தோம்.

கடந்த வாரம் நான் நியூயோர்க்கில் ஒரு சில சந்திப்புக்களின் போதும் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்தமை தொடர்பாக எவ்வளவு காலம் மௌனமாக இருக்கப் போகின்றீர்கள் என கேள்வியெழுப்பினேன். இதே கேள்வி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலும் எழுப்பப்பட்டது. இது தொடர்பாக பல்வேறு மனித உரிமை அமைப்புக்களும் அங்கு வலியுறுத்தியிருந்தன.

இந்நிலையில் ஐ.நா. அமைதிப் படையில் இருந்து இலங்கை இராணுவத்தினரை விலக்கிக்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கை அரசுக்கு பல்லாயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்படும். அத்துடன் கீர்த்தி பெற்ற சிறப்பான இராணுவம் என்று கூறுவதற்கு மிகப்பெரிய அடி விழுந்துள்ளது.

இவ்வாறிருக்கையில் சர்வதேசம் எமது பிரச்சினையை கண்டுகொள்ளாமல் உள்ளது என்றும் கூறமுடியாது - என்று தெரிவித்துள்ளார்.

## கையுடன் கைகோர்க்க முயற்சிக்கின்றார் சஜித்



ஐக்கிய தேசியகட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியதை தொடர்ந்து அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஊடாக சஜித் பிரேமதாச ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகரவை தொடர்பு கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

சஜித் பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனக்கு ஆதரவளிப்பதற்கான வாய்ப்புள்ளதா என்பதை அறிவதற்காக முதலில் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகரவுடன் பேச்சுகளை மேற்கொள்ளவுள்ளார். இந்த பேச்சுகள் வெற்றியடைந்தால் அவர் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தேர்தல் கூட்டுத் தொடர்பாக நேரடிப் பேச்சுகளை மேற்கொள்வார்.

சுதந்திரக் கட்சியின் தேர்தல் சின்னம் கை என்பது தெரிந்ததே.

### ஆஸி மகளிருக்கு எதிரான முதல் இருபதுக்கு இருபது போட்டி

# சாமரி அத்தபத்துவின் அதிரடி சதம் வீண் 41 ஓட்டங்களினால் வீழ்ந்தது இலங்கை!




ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக இடம் பெற்ற சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் தலைவி சாமரி அத்தபத்து சதம் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் சிட்னியில் ஆரம்பமான இத்தொடரின் முதலாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைக் குவித்தது.




ஆஸ்திரேலிய அணி சார்பில் பெத் மூனி 61 பந்துகளில் 20 நான்கு ஓட்டம் அடங்கலாக 113 ஓட்டங்களையும், அலிசா ஹெலி 21பந்துகளில் 43 ஓட்டங்களையும், ஆஷ்லீ கார்னர் 27 பந்துகளில் 49 ஓட்டங்களையும் அதிகபடியாகப் பெற்றனர்.

இதன் பின்னர் 218 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 41 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

எனினும் இப் போட்டியில் அணியின் வெற்றிக்காக சளைக்காது போராடிய இலங்கை அணியின் தலைவி சாமரி அத்தபத்து அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார்.

இப் போட்டியில் அவர் மொத்தமாக 66 பந்துகளை எதிர்கொண்டு 6 ஆறு ஓட்டம், 12 நான்கு ஓட்டம் அடங்கலாக 113 ஓட்டங்களைக் குவித்தார்.

இதன் மூலம் மகளிர்க்கான சர்வதேச இருபதுக்கு 20 கிரிக்கெட் அரங்கில் சதம் விளாசிய முதல் இலங்கை வீராங்கனை என்றசாதனையைஅவர்பதிவுசெய்துள்ளார்.

சாமரி அத்தபத்து கடந்த 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 178 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்டியன் கோல்மேனுக்கு 100 மீற்றரில் தங்கப் பதக்கம்

### 9.76 வினாடிகளில் ஓடிக் கடந்தார்



உலக தடகளப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் அமெரிக்க வீரர் கிறிஸ்டியன் கோல்மேன் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

100 மீற்றர் தூரத்தை 9.76 வினாடிகளில் கடந்து அவர் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

மற்றொரு அமெரிக்க வீரரான ஜஸ்டின் காட்லின் 9.89 வினாடிகளில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

அத்துடன், கனடா வீரர் ஆன்ட்ரி டி கிராஸுக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயத்தில், நெதர்லாந்தைச் சேர்ந்த சிஃபான் ஹசன் 30 நிமிடம் 17.63 வினாடிகளில் அத் தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

எத்தியோப்பியாவின் லெட்சன்பெட் கிடேவுக்கு வெள்ளிப் பதக்கமும், கென்யாவின் ஏக்னஸ் டைரப்பிற்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தது.

உலக தடகளப் போட்டி கட்டாரில் நடைபெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது

# ஒவ்வொரு வீரரின் திறனையும் மேம்படுத்துவதில் டோனியை விட சிறந்தவர்கள் யாருமே இல்லை

### ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் புகழாரம்

இந்திய அணியின் ஒவ்வொரு வீரரின் திறனையும் மேம்படுத்துவதில், டோனியை விட சிறந்தவர்கள் யாரும் இல்லை என அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஷிகர் தவான் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணிக்கு உலகக்கிண்ணம், ரி 20 உலகக்கிண்ணம், ஆசியக் கிண்ணம், ஐ.சி.சி.சம்பியன்ஸ் கிண்ணம் என பல்வேறு கிண்ணங்களைப் பெற்றுக்கொடுத்த மகத்தான அணித்தலைவராக பார்க்கப்படுபவர் டோனி.

அவர் தற்போது கிரிக்கெட்டிலிருந்து தற்காலிக ஓய்வுப் பெற்று, இந்திய இராணுவத்தில் பணிபுரிந்து வருகின்றார்.

இதற்கிடையில், டோனி தாமாகவே முன்வந்து ஓய்வுப் பெற வேண்டுமெனப் பலரும் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் டோனியின் ஓய்வுக் குறித்து ஷிகர் தவான் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தவான் கூறுகையில்–

டோனி நீண்ட காலமாக இந்திய அணிக்காக விளையாடி வருகிறார். அவர் எப்போது ஓய்வு பெற வேண்டும் என்பது அவருக்கு தெரியும் என்று நான் நினைக்கிறேன். இது அவருடைய முடிவாக இருக்க வேண்டும்.

அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையில் இந்திய அணிக்காக இன்றியமையாத தருணங்களில் பல முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளார். நேரம் வரும்போது அவர் தனது ஓய்வை அறிவிப்பார் என்று நான் நம்புகிறேன். என கூறினார்.






# 50 கிலோ மீற்றர் நடை பந்தயப் போட்டியில் 43 வயது போர்த்துக்கேய வீரருக்கும் பதக்கம்

உலக சாம்பியன்ஷிப் நடை பந்தயத்தில் பதக்கம் வென்று 43 வயதான வீரர் சாதனை படைத்துள்ளார்.

கட்டாரில் நிலவும் கடும் வெயிலுடனான காலநிலை காரணமாக இரவில் நடைபெற்ற 50 கிலோ மீற்றர் நடை பந்தயத்தில் ஆண்கள் பிரிவில் ஜப்பானைச் சேர்ந்த யூசுகே சுசுகி தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

43 வயதான போர்த்துக்கேய வீரர் ஜோவா வியேரா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இதன்மூலம் பதக்கம் வென்ற மிக வயதான வீரர் என்ற புதிய சாதனையை அவர் படைத்துள்ளார்.

கனடாவைச் சேர்ந்த இவான் டன்ஃபி வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றியிருந்தார்.

இதேவேளை, பெண்களுக்கான 50 கிலோ மீற்றர் நடை பந்தயத்தில் சீனாவின் ருய் லியாங் தங்க பதக்கத்தையும், கட்டாரின் மாவோகுலி மற்றும் இத்தாலியின் எலியோனாரா கிரிஜியோ முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்திருந்தனர்.

## பாகிஸ்தான் – இலங்கை ஒரு நாள் ஆட்டம்; இரண்டாவது ஆட்டம் இன்று நடக்கின்றது!

*பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி, பாகிஸ்தான் அணியுடன் மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபதுக்கு 20 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறது.*

*அதன்படி நேற்று முன்தினம் கராச்சி மைதானத்தில் பிற்பகல் ஆரம்பமாகவிருந்த முதலாவது ஒரு நாள் போட்டி மழை காரணமாக நாணய சுழற்சிக் கூட மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டது.*

*இதனால் இலங்கை–பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டி இன்று மாலை 3.30 க்கு அதே மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# மேன்முறையீட்டு நீதிமன்றில் சவாலுக்கு உட்படுகிறது கோட்டாபயவின் இலங்கைக் குடியுரிமை விவகாரம்!

கொழும்பு,செப்.30

கோட்டாபய ராஜபக்ஷவின் இலங்கைக் குடியுரிமையின் செல்லுபடித்தன்மையை சவாலுக்குட்படுத்தும், ரிட் மனுவொன்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்கடந்த வெள்ளியன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு தொடர்பான முழுமையான விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை. எனினும், நவம்பர் 16 ஜனாதிபதித் தேர்தலில் முக்கிய போட்டியாளர்களில் ஒருவராகக் கருதப்படும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இலங்கைக் குடியுரிமை எப்போதாவது சட்டபூர்வமாக வழங்கப்பட்டதா என்பது பற்றிய கேள்விகளை எழுப்பும் வகையில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ ஒரு இலங்கைக் குடிமகன் என்று கூறுவதைத் தடுக்கும் வகையில், இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்குமாறும், கோரப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.



இந்த மனுவை சிவில் செயற்பாட்டாளர்களான காமினி உயாங்கொட, பேராசிரியர் சந்ரகுப்த தெனுவெர ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் குடிமகன் அல்லர் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என புரவெசி பலய அமைப்பின் அமைப்பாளர், காமினி வஉயாங்கொட தெரிவித்துள்ளார்

எங்களை ஆள விரும்புவோர், சட்டத்தின் ஆட்சியை எவ்வாறு நிலைநிறுத்துவது என்பதற்கு முழு நாட்டிற்கும் ஒரு முன்மாதிரியானவராக இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம் என்று தெரிவித்தார்.

மனுதாரர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றிடம், இடைக்கால நிவாரணம் கோருகின்றனர்.

இந்த மனு தொடர்பாக, கோட்டாபய ராஜபக்ஷவின் சட்ட விவகாரங்களைக் கையாளும் குழுவின் தலைவரான சட்டவாளர் அலி சப்ரியிடம் கேள்வி எழுப்பிய போது, தற்போது இதுகுறித்து எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது என அவர் கூறியுள்ளார்.

எனினும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இதுதொடர்பான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது என்பதை, கோட்டாபய ராஜபக்ஷவின் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல உறுதிப்படுத்தியுள்ளார்.

நீதிமன்ற அறிவிப்பு கிடைத்துள்ளது. அவர்கள் கோட்டாபயவைக் கண்டு எவ்வளவு அஞ்சுகிறார்கள் என்பது தெரிகிறது.

அவரது வேட்புமனுவைத் தடுக்க முயற்சிக்கும்போது, அவர்கள் ஜனநாயகம் பற்றி பேசுகிறார்கள்.

அவர்கள் அவரை மிகவும் வலிமையான வேட்பாளராக கருதுகின்றனர், அவருடன் போட்டியிட முடியாது என நம்புகிறார்கள் என்று அவர் கூறினார்.

எனினும், கோட்டாபய ராஜபக்ஷ ஒரு சட்டபூர்வமான சிறிலங்கா குடிமகன் அல்லர் என்ற குற்றச்சாட்டுக்கு ரம்புக்வெல எந்த விளக்கமும் கொடுக்கவில்லை.

## ஜயம்பதியின் கட்சி ஜே.வி.பி. பக்கம்; 2ஆம் வாக்கு கோட்டாவுக்கு எதிராக!



கொழும்பு,செப்.30

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜே.வி.பி. வேட்பாளர் அனுரகுமார திசநாயக்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள, கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்னவின் தலைமையிலான ஐக்கிய இடதுசாரி முன்னணி, இரண்டாவது விருப்பு வாக்கை கோட்டாபய ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்காக பயன்படுத்த வேண்டும் என்று கோரியுள்ளது.

இதுகுறித்து விளக்கமளித்துள்ள கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன –

அனுரகுமார திசநாயக்கவுக்கு ஆதரவு அளிக்க முடிவு செய்துள்ள, ஐக்கிய இடதுசாரி முன்னணி, இரண்டாவது விருப்பு வாக்கை, சர்வாதிகார அச்சுறுத்தலை தோற்கடிப்பதற்காக, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான பலமான வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் என கட்சி ஆதரவாளர்களையும் பொதுமக்களையும் கோருவதற்கு முடிவுசெய்துள்ளது.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் இருந்து விலகும் முடிவு எடுக்கப்படவில்லை. ஆளும்தரப்பு ஆசனத்தில் அமருவதென்றே கட்சி முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்

**கோட்டாபயவின் இரட்டைக் குடியுரிமை ஆவணப் பதிவுகள் மாயம்;**

## கைவிரிக்கின்றன பாதுகாப்பு அமைச்சும் குடிவரவு, குடியகல்வு திணைக்களமும்

கொழும்பு,செப்.30

கோட்டாபய ராஜபக்ஷவின் இரட்டைக்குடியுரிமை தொடர்பான பதிவுகள் எவையும் தம்மிடம் இல்லை என்று, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சும், குடிவரவு,குடியகல்வு திணைக்களமும் தெரிவித்தன எனக் குற்றவிசாரணைப் பிரிவு, கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பாக சிவில் சமூக செயற்பாட்டாளர்களான காமினி உயாங்கொட, சந்ரகுப்த தெனுவெர ஆகியோர் செய்த முறைப்பாடு குறித்து நடத்தப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பான பி அறிக்கையிலேயே குற்ற விசாரணைத் திணைக்களம் இவ்வாறு கூறியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான ஆவணங்களைக் கேட்டு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடம் எழுத்து மூலம் தாம் கோரியிருந்ததாகவும், அதற்கு குடிவரவுத் திணைக்களம் அனுப்பியுள்ள பதிலில், 2005ஆம் ஆண்டு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்ட காலத்தில் பாதுகாப்பு அமைச்சே அந்த விவகாரத்தை கையாண்டது என்றும், தம்மிடம் எந்த ஆவணங்களும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சிடம் ஆவணங்களைக் கோரி எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்த நிலையில் இரட்டை குடியுரிமை தொடர்பான விடயங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினாலேயே கையாளப்பட்டுள்ளன என்றும், கோரப்பட்ட ஆவணங்கள் எதுவும் பாதுகாப்பு அமைச்சிடம் இல்லை என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமைச் சான்றிதழ் தொடர்பான ஆவணங்களை குற்ற விசாரணைத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு, குடிவரவுத் திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதிவானிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கோரப்பட்டது.

இதையடுத்து, கொழும்பு பிரதம நீதிவான் லங்கா ஜெயரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கையை ஏற்று குறித்த ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு குடிவரவுத் திணைக்கள கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.






## கட்டுத்துவக்கு வெடித்ததில் கரடியனாறில் சிறுவன் பலி!

மட்டக்களப்பு, செப்.30

மட்டக்களப்பு – கரடியனாறு கித்துள் பகுதியில் நேற்று முன்தினம் மாலை கட்டுத்துவக்கு வெடித்துச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். இந்த சம்பவத்தில் கித்துள் சர்வோதய நகரை சேர்ந்த சி.தனுஜன் என்னும் 15 வயது சிறுவனே உயிரிழந்துள்ளான் எனக் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு பேர் வேட்டைக்கு சென்ற நிலையில் அவர்கள் கொண்டுசென்ற கட்டுத்துவக்கு வெடித்து அப்பகுதியில் ஆடுகள் மேய்த்துக் கொண்டிருந்த சிறுவன் படுகாயமடைந்துள்ளான்.

கரடியனாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட சிறுவன், இடையில் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வேட்டைக்கு சென்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுவோரை கைது செய்யும் நடவடிக்கைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சிறுவனின் தந்தை மாவீரர் எனவும் தாய் வேறு திருமணம் செய்து சென்ற காரணத்தினால் உறவினர் வீட்டில் அந்தச் சிறுவன் வசித்து வந்தான் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பாகிஸ்தானுக்கு எதிராக நியூயோர்க்கில் போராடிய அந்நாட்டின் பெண் ஆர்வலர்!

நியூயோர்க், செப்.30

ஐ.நா. கூட்டத்தில் பங்கேற்ற இம்ரான்கானுக்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டத்தில் பாகிஸ்தானில் இருந்து தப்பிச் சென்ற பெண் சமூக ஆர்வலர் பங்கேற்று முழக்கமிட்டார்.

பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த பெண் சமூக ஆர்வலர் குலாலாய் இஸ்மாயில் (வயது 32). இவர் தனது சிறு வயது முதல் பாகிஸ்தானில் நடைபெற்று வரும் குழந்தைகள் திருமணம், பெண் ஆணவக் கொலைகள் போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு எதிராக குரல் கொடுத்து வந்தார்.

கைபர் பக்துன்வா, பலூசிஸ்தான் மாகாணம் உள்ளிட்ட சில பகுதிகளில் பழங்குடி இனத்தவர்களான பஷ்தூன் இன பெண்கள் மற்றும் சிறுமிகள் மீது பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டுவரும் கற்பழிப்பு, பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பான புகைப் படங்களை ஆதாரத்துடன் சமூக வலைதளங்களில் வெளியிட்டார்.

இதனால், குலாலாய் இஸ்மாயில் மீது நாட்டுக்கு எதிராகச் செயல்பட்டார் எனத் தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டு அவரை கைது செய்வதற்காக தேடுதல் வேட்டையைப் பொலிஸார் தீவிரப்படுத்தினர்.

இதையடுத்து, தலைமறைவாக வாழ்ந்து வந்த குலாலாய் இஸ்மாயில் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் உதவியுடன் பாகிஸ்தானில் இருந்து தப்பிச் சென்று அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் பேசினார். இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து ஐ.நா. சபை வளாகத்துக்கு வெளியே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண் சமூக ஆர்வலர் குலாலாய் இஸ்மாயில் பங்கேற்று பாகிஸ்தானுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினார்.



மேலும், பாகிஸ்தான் நாட்டில் உள்ள சிறுபான்மையினரான பஷ்தூன், சிந்து, பலூஸ் போன்ற மக்களுக்கு எதிராக இராணுவம் அடக்குமுறைகளை கையாள்கிறது, மனித உரிமைகள் மீறப்படுகின்றன என ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற குலாலாய் இஸ்மாயில் தெரிவித்தார்.

# கொத்தடிமைகளாக சங்கிலியில் பிணைக்கப்பட்ட 300 பேர் மீட்பு

## நைஜீரியாவில் அம்பலத்துக்கு வரும் கொடூரம்

நைஜீரியாவில் கொத்தடிமைகளாக சங்கிலியில் பிணைக்கப்பட்டிருந்தவர்கள் உள்பட 300 பேரை பொலிஸார் மீட்டுள்ளனர். வடக்கு நைஜீரியாவில் உள்ள கடுனா என்ற என்ற நகரில் உள்ள இஸ்லாமியப் பள்ளியில் பொலிஸார் அதிரடி சோதனை மேற்கொண்டனர்.

அப்போது 5 வயது முதல் 20 வயது வரையிலான சிறார்கள், இளைஞர்கள் என பெரும்பாலும் ஆண்கள் அடங்கிய 300 பேர் மீட்கப்பட்டனர். அவர்களில் பலரது கால்களும், கைகளும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன. சிலரது முதுகில் கசையடிகளின் தழும்புகள் காணப்பட்டன.

அவர்களில் பலர் தங்களது பெற்றோரால் கொண்டு வந்து சேர்க்கப்பட்டவர்கள் என்பதால், அவர்கள் மீட்கப்பட்டு பெற்றோரிடமே ஒப்படைக்கப்பட்டனர்.



அவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு, பட்டினி போடப்பட்டு, பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டனர் என விசாரணைகளின் பின்னர் பொலிஸார் கூறியுள்ளனர். அத்தகைய பள்ளிகளை மூடத் திட்டமிடப்பட்டிருப்பதாக நைஜீரிய அதிபர் முகமது புகாரி ஏற்கெனவே கூறியுள்ளார்.




புதுவைக் கடற்கரையில்

# வெளிநாட்டவர் இணைந்து 1 தொன் குப்பை அகற்றல்

புதுச்சேரி, செப்.30

புதுவை கடற்கரையில் வெளிநாட்டினர் தூய்மைப்பணியில் ஈடுபட்டனர். அப்போது சுமார் ஒரு தொன் குப்பைகள் அகற்றப்பட்டன.



பருவநிலை மாறுபாடு, சுற்றுப்புற சூழல் மாசு போன்றவை தற்போது மிக முக்கிய பிரச்சினைகளாகப் பேசப்பட்டு வருகின்றன. சுற்றுப்புற சூழல் மாசுபடாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளில் அரசும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இணைந்து செயல்பட்டு வருகின்றன.

அந்த வகையில் ஹைடிசைன் நிறுவனம் சார்பில் நேற்றுமுன்தினம் புதுவை கடற்கரையில் தூய்மைப்பணி நடந்தது. ஹைடிசைன் நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு தன்னார்வல தொண்டு நிறுவனங்களை சேர்ந்த வெளிநாட்டவரும் இந்தத் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர். இப்பணியை கடற்கரைக்கு வந்தவர்கள் பாராட்டினர்.

மாலை 5 மணி முதல் 6 மணி வரை நடந்த இந்தத் தூய்மைப் பணியில் 80 தன்னார்வலர்களுடன் புதுவை நகராட்சி துப்புரவு பணியாளர்களும் ஈடுபட்டனர். அப்போது சுமார் ஒரு தொன் அளவுக்கு குப்பைகள் அகற்றப்பட்டன.

# ‘ஐ.என்.எஸ். காந்தேரி’ நீர்மூழ்கி போர்க்கப்பல் கடற்படையில் சேர்ப்பு

மும்பை, செப்.30



உலகத்தரத்துடன் இந்தியாவில் கட்டப்பட்ட ஐ.என்.எஸ். காந்தேரி நீர்மூழ்கி போர்க்கப்பல் இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது.

‘ஸ்கோர்பியன்’ வகை நீர்மூழ்கி கப்பல்கள் உலகத்தரம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இந்தியாவில் இந்த வகை நீர்மூழ்கி கப்பல்கள் ‘கல்வாரி’ என்று அழைக்கப்படுகின்றன. 2005 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு ஒத்துழைப்புடன் 6 கல்வாரி வகை நீர்மூழ்கி போர்க் கப்பல்களை உள்நாட்டில் கட்ட ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதன்படி ஐ.என்.எஸ். கல்வாரி என்ற முதல் நீர்மூழ்கி போர்க் கப்பலை பிரதமர் மோடி கடந்த 2017 ஆம் ஆண்டு கடற்படையில் இணைத்தார். அப்போது, இந்த வகை நீர்மூழ்கி கப்பல்கள் ‘மேக் இன் இந்தியா’ திட்டத்துக்கு மிகச் சிறந்த உதாரணம் என்று அவர் பெருமிதத்துடன் கூறினார்.

2 ஆவது கல்வாரி வகை நீர்மூழ்கி கப்பலின் பெயர் ஐ.என்.எஸ். காந்தேரி. மும்பை மஜகாவ் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. உலகின் மிகச்சிறந்த நீர்மூழ்கி போர்க் கப்பலான இதன் எடை 1,615 தொன் ஆகும். 221 அடி நீளமும், 40 அடி உயரமும் கொண்டது.

பட்டரியிலும், டீசலிலும் இயங்கும் இந்த போர்க்கப்பல் கடலுக்கு அடியில் மணிக்கு 37 கிலோ மீற்றர் (20 கடல் மைல்) வேகத்திலும், கடல் மேற்பரப்பில் 20 கிலோ மீற்றர் (11 கடல் மைல்) வேகத்திலும் இயங்க கூடியது. இந்த நீர்மூழ்கி கப்பல் கடலுக்குள் இருந்தபடியும், கடலின் மேற்பரப்புக்கு வந்தும் எதிரிகளின் கப்பல்களை ஏவுகணையை வீசி தாக்கும் திறன் கொண்டது. எதிரி கப்பல்களின் கண்ணுக்கு புலப்படாமல் தாக்கும் வல்லமையும் கொண்டது.

இந்த கப்பல் கட்டமைக்கப்பட்டு, கடந்த இரண்டரை ஆண்டுகளாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. வெற்றிகரமாகச் சோதனை ஓட்டத்தை முடித்த நிலையில், இதனை கடற்படையில் இணைத்து நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழா நேற்றுமுன்தினம் மும்பை கடற்படைத் தளத்தில் நடந்தது.



# டெங்கு காய்ச்சல்
# தற்காத்துக்கொள்ள சில வழிமுறைகள்!

பருவமழை தொடங்கும் காலத்தில் சீதோஷ்ண நிலை மாற்றத்தால் டெங்கு காய்ச்சல் அதிகளவில் பரவுகிறது. 2017 இல் டெங்கு காய்ச்சால் அதிக உயிர்கள் பலியாகின்றன.

ஆனால், அந்தப் பேரிழப்பிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வில்லை. இதுவரை பல உயிர்களை டெங்கு காய்ச்சலுக்குப் பலிகொடுத்திருக்கிறோம். டெங்கு பரவும் விதம், அறிகுறிகள், அதைத்தடுப்பதற்கான வழிமுறைகள் என நம்மைத் தற்காத்துக்கொள்ள சில வழிமுறைகள்.

**டெங்கு எப்படி பரவுகிறது?**

ஏடிஸ் எஜிப்டி வகையைச் சேர்ந்த நுளம்புகள்கடிப்பதால் பரவும் வைரஸ் நோய் இது. இந்தக் நுளம்புகள் பெரும்பாலும் பகல் நேரங்களில் வலம்வரக் கூடியவை. நுளம்பு கடித்து ஐந்தாறு நாள்களில் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கும்.

டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு ஹாமொராஜிக் காய்ச்சல் என்று இரண்டு வகைகள் இருக்கின்றன. முதல் வகை ஃப்ளு காய்ச்சல் போன்றது. இரண்டாம் வகைக் காய்ச்சலால் உயிரிழப்புகூட ஏற்படும்.

**அறிகுறிகள்:**

காய்ச்சல், தலைவலி, கண்ணுக்குப் பின்புறம் எடுக்கத் தொடங்கும்வலி போன்றவை முதற்கட்ட அறிகுறிகள்.

தசை மற்றும் மூட்டு வலி.

பசியின்மை.

சுவையை உணர முடியாமல் போதல்.

தட்டம்மைபோல மார்பு மற்றும்மூட்டுகள்அருகேசருமப்பிரச்சினைகள் வரக்கூடும்.

குமட்டலுடன் கூடிய வாந்தி.



**அரசு செய்ய வேண்டியவை:**

தெரு சுத்தம், கழிவுநீர் அகற்றுதல், நுளம்பு ஒழிப்பு போன்ற பணிகளில் உடனடியாக இறங்க வேண்டும்.

தண்ணீர் தேங்குவதைத் தடுப்பதையும், குப்பை மேலாண்மையையும் பொது சுகாதாரத்துறை மற்றும் உள்ளூராட்சி அமைப்புகளை முடுக்கி விடுவதன் வாயிலாக உறுதிப்படுத்த வேண்டும்.

பரவலாக மருத்துவ முகாம்களை நடத்தி மக்களுக்கு டெங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், அரசு மருத்துவமனைகளில் போதிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலமும் நோய் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும்.

பாதுகாப்பான குடிதண்ணீருக்கு உறுதி தர வேண்டும்.

நுளம்பு ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும்.

**பொதுமக்கள் செய்ய வேண்டியவை:**

வீட்டைச்சுற்றித்தேங்கியிருக்கும் தண்ணீரில் தான் டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு இன விருத்தி செய்கின்றன. எனவே, தண்ணீர் தேங்கவிடாமல் பார்த்துக் கொள்வது தலையாய பணி.

குப்பைகள், வீணாகும் பொருள்களை முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.

நுளம்பு வலை, முழுக்கை-முழுக்கால் சட்டைகள் என்று நுளம்பு கடிக்காமல் தடுப்பதற்கானநடவடிக்கைகளைப்பின்பற்ற வேண்டும்.

டெங்குக்கானஅறிகுறிகள்தென்பட்டால் காலதாமதமின்றி மருத்துவரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

ஏடிஸ் எஜிப்டி வகையைச் சேர்ந்த நுளம்புகள் கடிப்பதால் பரவும் வைரஸ் நோய் இது. இந்தக் நுளம்புகள் பெரும் பாலும் பகல் நேரங்களில் வலம்வரக் கூடியவை. நுளம்பு கடித்து ஐந்தாறு நாள்களில் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கும்.



# ரணிலுக்குப் பதவி கிட்டுவது ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பின்னணியில், மஹிந்த குடும்பம் ஆட்சிக்கு வருவதையோ, கோட்டாபய ஜனாதிபதியாக வருகின்றமையையோ ரணில் தமக்கு ஆபத்தானதாகப் பார்க்கவில்லை. ஒருவகையில் தமக்குப் பாதுகாப்பானதாகவே இதனை அவர் கருதுகி றார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆரம்பக் கருத்துக் கணிப்பீடுகள் கோட்டாபயவுக்கே சாதகமாகவுள்ளன. ஊடகங்களும் சாத்திரங்களும் தினசரி இதனையே தெரிவித்து வருகின்றன.

இப்படியான சூழ்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் தோற்றவர் என்ற களங்கத்தை தமக்கு ஏற்படுத்திக் கொள்ள ரணில் இப்போது விரும்பவில்லை.

எனவே, சஜித் போட்டியிடுவதாக அறிவித்து, கோட்டாபயவிடம் அவர் தோல்வியடைந்தால் அத்துடன் அவரது அரசியல் வாழ்க்கை அஞ்ஞானவாசம் அடைந்துவிடுமென்பது ரணில் போட்டிருக்கும் கணக்கு.

சஜித் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவது எந்தவகையிலும் தாம் தொடர்ந்து வகித்துவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்பதை முற்கூட்டியே அவர் நிச்சயப்படுத்திவிட்டார்.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் எவரும் ஏதாவதொரு கட்சியின் தலைமைப் பதவியிலிருந்தால் மாத்திரமே பிரதமர் அல்லது எதிர்க் கட்சித் தலைவர் பதவியை வகிக்க முடியும். இதனை நன்குணர்ந்ததாலேயே மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுன என்ற புதிய



கட்சியை உருவாக்கி, அதன் தலைவராகி, அதன் வேட்பாளராக கோட்டாபயவை நிறுத்தியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் கோட்டாபய ஜனாதிபதியாகத் தெரிவானால், அக்கட்சியின் தலைவர் என்ற பதவி வழியாக பிரதமர் பதவி மைத்திரிக்குச் சென்றுவிடும்.

இதன் காரணமாகவே பொதுச்சின்னத்தில் கோட்டாபய போட்டியிட இணங்காது, பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் அவர் போட்டியிடுவார் என்ற நிலைப்பாட்டில் மஹிந்தவும் அவரது குழுவினரும் உள்ளனர்.

மஹிந்தவின் திட்டத்துக்கு நிகரான திட்டத்தையே ரணிலும் வகுத்துள்ளார். இதனை பின் வருமாறு பார்க்கலாம்.

42 வருட அரசியலில் நான்கு தடவை பிரதமராக இருந்தவர். பல தடவை எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். பல அமைச்சர் பதவிகளை வகித்தவர். முதலாவது ஜனாதிபதி ஜே.ஆரின் குடும்ப வாரிசு. எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக தாமே தொடர வேண்டுமென்பது அவரது இலக்கு.

கட்சியின் தலைவராக இருந்தால் மட்டுமே வெற்றி பெற்றாலென்ன தோல்வியடைந்தாலென்ன அரசியல் உயர்பீடக் கதிரையில் அமரும் வாய்ப்பு எப்போதும் இருக்கும்.

சஜித் வெற்றி பெற்று ஜனாதிபதியானால், கட்சியின் தலைவர் என்ற பதவி வழியாக ரணில் பிரதமராவார். இதனை எவராலும் தடுக்க முடியாது. 19வது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதியைவிட பிரதமருக்கே கூடிய அதிகாரங்கள்.

சஜித் தேர்தலில் தோல்வியடைவாரானால் கட்சித் தலைவர் என்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ரணிலுக்கே செல்லும். சஜித்துக்கு எந்தப் பதவியும் கிடையாது. அவரின் எதிர்காலம் பூச்சியமாகும்.


முடிவில், கோட்டாபய வென்றால் மஹிந்த பிரதமர். ரணில் எதிர்க்கட்சித் தலைவர். சஜித் வெற்றி பெற்றால் ரணில் பிரதமர், மஹிந்த எதிர்க் கட்சித் தலைவர்.

இருவரில் யார் வென்றாலென்ன தோற்றாலென்ன, ரணிலுக்கும் மஹிந்தவுக்கும் உயர் பதவிகளுக்கு உத்தரவாதம். இந்தச் சூத்திரம் தேர்தல் முடிவுகளின் பின்னரே பலருக்கும் தெரியவரலாம்.

இவ்வகையான திட்டங்களை நெறிப்படுத்துவதில் ரணிலும் மஹிந்தவும் கூடப்பிறவாத இரட்டையர்கள்.

இத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்? ★

# வவுனியாவில் இணைய தொழிநுட்ப மாநாடு







வவுனியா, வைரவப் புளியங்குளத்தில் அமைந்துள்ள தனியார் தொழிநுட்ப கல்வி நிறுவனத்தில் மைக்கிரோ சொப்ட் நிறுவனத்தின் இணைய தொழிநுட்ப மாநாடு நேற்றுக் காலை 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை இடம் பெற்றது.

மைக்கிரோ சொப்ட் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளான ம.விக்னராஜ், க.ஹட்சனா மற்றும் அசிஸ்ரியா நிறுவனத்தின் பணிப்பாளர் ப.லதீப் ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டு இணையத்தின் பயன்பாடும் அதில் மைக்கிரோ சொப்ட் நிறுவனத்தின் பங்கும், இணையத்தில் எவ்வாறு கோப்புகள், மென்பொருள்களை இலகுவாக சேமித்து செயற்படுத்துவது, இணையம் மூலம் எவ்வாறு இலாபம் ஈட்டுவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது.



இந் மாநாட்டில் தொழிநுட்ப ஆர்வளர்கள், மென்பொருள் வடிவமைப்பாளர்கள், தொழிநுட்ப கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் என நூற்றுக்கு மேற்பட்ட துறைசார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழ் பாவை அரிச்சுவடி நூல் வெளியீட்டு விழா





உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் இலங்கை கிளையின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற திருமதி. பாரதிமூர்த்தியப்பன் எழுதிய தமிழ் பாவை அரிச்சுவடி எனும் நூல்வெளியீட்டு விழா நடைபெற்றபோது நூலின் முதல் பிரதியை புரவலர் ஹாசிம் உமர், பிரதம அதிதி முன்னாள் அமைச்சர் பி.பி தேவராஜிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

தலைமைவகித்த தே.செந்தில்வேலவர். முன்னிலை வகித்த முனைவர் சிவலிங்கம் சதீஷ் குமார் . சிறப்பு அதிதி, உடுவை எஸ் தில்லை நடராஜா காப்பியக்கோ ஜின்னா சரிபுத்தீன் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி இராஜகுலேந்திரா நூல் ஆய்வுரை எம்.எஸ்.எம் தஸ்லிம், கே.ரீ.குருசாமி .ஆகியோர் உரையாற்றினார்கள்.



இந் நூல் புலம் பெயாந்த மற்றும் இலங்கையில் வாழும் தமிழ் மாணவர்கள் இலகுவாக ஆங்கில மொழி மூலம் தமிழை கற்பதற்காக இலண்டன் வாழ் சொக்கலிங்கம், பாரதி மூர்தியப்பன் எழுதிய இலக்கண தமிழ் பாவை அரிச்சுவடி மிகவும் பிரயோசனப் படக் கூடியதாக உள்ளது.

இந் நிகழ்வின் போது உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் தலைவர் முனைவர் சிவலிங்கம் சதீஸ்குமார், சிரேஷ்ட ஊடகவியலாளா செந்தில் வேலர் இலங்கைப் பத்திரிகைப் பேரவையின் உறுப்பிணராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டதை கௌரவித்து அவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.



தினக்குரல்
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Online Media
LANKASRI




northern PC Park

கணினி உலகில்
நம்பகமான சேவையில்
10 வருடங்களுக்கு
மேலாக யாழ் மண்ணில்

வடக்கின்
கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள
நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co

| | | |
|---|---|---|
| Northern Pc Park | 0777570124 | 0215675566 |
| NPcpark | 0773366443 | 0212229581 |
| northernpcpark | 0766999597 | 0212222050 |
| Northern Pc Park | 0717772377 | 0212220388 |

# சமசமாஜிகளின் தேசிய சம்மேளனத்தில் கோட்டா,மஹிந்த உட்பட பல தலைவர்கள்

கொழும்பில் சமசமாஜ கட்சியின் தேசிய சம்மேளனத்தில் அதிதியாக கலந்து கொண்ட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் நீண்ட வரலாறைக் கொண்ட இடதுசாரிக் கட்சியான அதன் பணியைப் பாராட்டினார்.

நாட்டை முன்னோக்கி கட்டியெழுப்பும் தனது பயணத்திற்கு ஒத்துழைப்பை வழங்கும் இடதுசாரிகளுக்கு தனது வரவேற்பையும் வெளியிட்டார் கோட்டாபய.

மஹிந்த ராஜபக்ஷ உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.









# கோட்டாபயவின் உடல் நிலை குறித்து பொய்ப் பிரசாரம் என மஹிந்த கவலை



கொழும்பு,செப்.30

பொதுஜனபெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் உடல் நிலை குறித்துப் பொய்யான பிரசாரங்கள் இடம்பெறுகின்றன என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவலை தெரிவித்துள்ளார்.

கோட்டாபய மீது சேறு பூசுவதற்காக சமூக ஊடகங்களைச் சிலர் பயன்படுத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை பொய் பிரசாரங்கள் மூலம் தவறாக வழிநடத்தமுடியாது. கோட்டாபய உடல்நலப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளார் என சித்திரிக்கும் விதத்தில் சமூக ஊடகங்களில் படங்களை வெளியிடுகின்றனர். கோட்டாபயவின் உடல் நிலைக்கு ஏதாவது பாதிப்பா எனக் கேட்டு எனக்குப் பல தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. பொய்யான தகவல்களை மக்கள் நம்பக் கூடாது. – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொகுதி அமைப்பாளர்களை இன்று ஒன்று கூட்டுகின்றது ஐ.தே.கட்சி

கொழும்பு,செப்.30

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் இன்று காலை 10.00 மணிக்க. கட்சியின் தலைமையகமான சிறிக்கொத்தவுக்கு வருமாறு கட்சியின் பொதுச் செயலாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்துவது இந்த அழைப்புக்கான நோக்கம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவும் கலந்துகொள்ளவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஓமந்தையில் இளைஞன் பலி

## அதிக வேகத்தினால் அனர்த்தம்



வவுனியா, செப்.30

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதர்பனிக்கர் மகிளங்குளம்பகுதியில்இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார் என ஓமந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, பாலமோட்டை பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞர் இரவு 11 மணியளவில் பல்சர் ரக மோட்டார்சைக்கிளில் இறம்பைகுளம் சந்தியிலிருந்து, தனது வீடு நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார்.

மாதர் பனிக்கர் மகிழங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்த போது அதிக வேகம் காரணமாக கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகில் இருந்த மதகுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதனால் தூக்கி வீசப்பட்ட இளைஞன் படுகாயமடைந்த நிலையில் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் கொண்டு செல்லப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட முன்னரே இளைஞன் மரணமடைந்துள்ளார். விபத்தில் பாலமோட்டை பகுதியைச் சேர்ந்த சசிகுமார் பிரிந்தன் (வயது 20) என்ற இளைஞரே மரணமடைந்தவராவார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கபட்டிள்ளது. விபத்து தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

90 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்

இல.10, மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2019 இல் வெளியிடப்பெற்றது.